# காங்கேசன் துறைமுக வேலைகள் முற்றாக ஸ்தம்பிதம்

## யந்திரங்கள் திருப்பி அனுப்பப்படுகின்றன


Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 254
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஐப்பசி 6 ஷஃபான் 21 வெள்ளிக்கிழமை (23-10-70)



★ யுனிக்
★ நாஷனல்
★ சன்யோ
★ சொனி
ஆகிய றேடியோக்கள்
நிதான விலைகளில் கிடைக்கும்
V. K. இராசரத்தினம்
95, ஸ்ரான்லி றேட் — யாழ்ப்பாணம்



நவநாகரீக நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்
ஹரன் ஜுவல்லர்ஸ்
R. G. பில்டிங்,
50, கன்னாதிட்டி யாழ்ப்பாணம்
போன்: 444 தந்தி: 'இரத்தினம்ஸ்'
உரிமையாளர்: க. கிருபாகரன்
இரத்தினம் ஆபரண மாளிகை
உரிமையாளர் (காலஞ்சென்ற)
திரு. K. V. கனகரத்தினம் J. P.
அவர்களின் மருமகன்


மாவிட்டபுரம், வியாழன்

காங்கேசன்துறை துறைமுக வேலைகள் முற்றாக நிறுத்தப்பட்டுள்ளன. இதுவரைவேலையிலீடுபட்டிருந்த யந்திரங்கள் யாவும் திருப்பி அனுப்பப்படுகின்றன.

தேசிய அரசாங்கத்தின் ஆட்சியின்போது பிரதமராகவிருந்த டட்லி சேனநாயக்கா இத்துறைமுகத்துக்கு அடிக்கல் நாட்டினார். இதையடுத்து இவ்வருட முற்பகுதியில் அரசாங்க பொறியியல் கூட்டு ஸ்தாபனத்தினரால் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்றுவந்தது

இத்துறைமுக அபிவிருத்திக்கென முன்பு ஒதுக்கப்பட்ட பணம் முழுவதும் முடிவடைந்ததால் மேலும் வேலைகள் செய்யமுடியாது வேலைகளைப் பொறுப்பேற்ற அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனம் இடையில் நிறுத்தியுள்ளது. இவ்வேலைகள் எப்போதைக்கு இனி தொடங்குமோ என்று தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுவரை இத்துறைமுக வேலைக்கு 15 லட்சம் ரூபா முடிவடைந்துள்ளதாகவும், கடலுக்குள் 160 அடி தூரத்துக்கு அணை இடப்பட்டுள்ளதாகவும் அறியப்படுகிறது.

துறைமுக வேலைகளுக்காக வந்த யந்திரங்களும், மற்றும் உபகரணங்களும் படிப்படியாக அனுப்பப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

'இதற்கிடையில் துறைமுகவேலையை நிறுத்தாது தொடர்ந்து நடத்தவேண்டும்' என அரசைக் கோரும் தீர்மானம் ஒன்றை காங்கேசன்துறை பட்டினசபையின் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இத்தீர்மானத்தை காங்கேசன்துறை பட்டினசபைத் தலைவர் திரு. க. ஜெயபாலசிங்கம் அரசுக்கு அனுப்பிவைத்துள்ளார்.

# தமிழ்ப் பட்டதாரிகளுக்கு நவம்பர் முதல் நியமனம்

## கந்தரோடையில் உதவி மந்திரி துடாவை தகவல்

உடுவில், வியாழன்

தமிழ்ப் பட்டதாரிகள் பலருக்கு நவம்பர் முதலாம் திகதி முதல் ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும்.

இந்தத் தகவலை உதவிக் கல்வி அமைச்சர் திரு. துடாவை கந்தரோடையில் நடந்த வரவேற்பு வைபவமொன்றில் வெளியிட்டார்.

கந்தரோடையில் உதவிக் கல்வியமைச்சர் திரு. துடாவைக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

உதவி அமைச்சர் பேசுகையில் கூறியதாவது:-

'நவம்பர் முதலாம் திகதி [illegible]

### 'பரஸ்பரம் மொழிகளைப் பயிலவேண்டும்'

சுன்னாகம் இராமநாதன் கல்லூரி பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக கல்வி உதவி அமைச்சர் திரு துடாவை கலந்துகொண்டார். அவ்விழாவில் அவர் உரையாற்றுகையில் கூறியதாவது:-

தமிழ்.சிங்கள இனங்களிடையே தமது சுயமொழிகளைப் பயில்வதிலும் பார்க்க கூடிய அளவில் ஆங்கிலத்தைக்கற்கவேண்டும் என்ற ஆவல் தலைதூக்கி நிற்கின்

சோஷலிச அமைப்பின் அடிப்படையில் பொருளாதாரத்தை வளர்ப்பதற்கேற்ற கல்வி நாட்டுக்கு தேவை. விஞ்ஞானம், வர்த்தகம், தொழில் நுட்பக்கல்விகள் போதிக்கப்பட வேண்டும் இதற்கான முயற்சிகளில் நாம் ஈடுபட்டுள்ளோம். மிக விரைவில் இதற்கு தீர்வு ஏற்படும் என்பது நம்பிக்கை. தமிழ்-சிங்கள இன ஒற்றுமை வலுப்படவேண்டும். கலாசார வளர்ச்சியில் ஈடுபட்ட அநகாரிகதர்மபால, சித்திலெப்பை, ஆறுமுக நாவலர் போன்றோரும், இன ஒற்றுமையை வளர்த்த சேர் பொன். இராமநாதன், அருணசலம்போன்

## மொழிபெயர்ப்பு நூல்கள் இல்லை

கோட்டை, வியா

வைத்தியக் கல்வியை சுயபாஷை மூலம் போதிப்பதற்கு வசதியாக இதுவரை ஆங்கிலத்திலிருந்து தமிழிலேயோ அல்லது சிங்களத்திலேயோ தேவையான நூல்கள் மொழிபெயர்க்கப்படவில்லை. 1969ம் ஆண்டு ஒரேயொரு வைத்தியநூல் மாத்திரம் ஆங்கிலத்திலிருந்து சிங்களத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது,

பத்திரிகைகள் நூல்கள் பதிவுகாரர் திரு அமரவன்சா தேவராசா மேற்[illegible]வாறு 1968—69-ம் [illegible]டுக்கான தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## வவனியாவில் புராதன நகரம் கண்டு பிடிப்பு!

கோட்டை, வியாழன்

வவனியாவில் புராதன நகரமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

வவனியாவிலுள்ள செட்டிகுளம் என்னும் பகுதியில் இந்நகரத்தை வவனியா அரசாங்க அதிபர் கண்டுபிடித்துள்ளார் இங்கு பௌத்த சின்னங்கள், சந்திர வட்டக்கற்கள், சிற்ப வேலைப்பாடமைந்த புராதன தூண்கள் முதலியன காணப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பேராசிரியர் திரு. பரன விதான இப்புராதனநகரத்தைப்பற்றிக் குறிப்பிடுகையில் 'இங்கு காணப்படும் புராதனசின்னங்களைநோக்குமிடத்து இந்நகரம் கிறிஸ்துவுக்கு முன் முதலாம் நூற்றூண்டைச் சேர்ந்ததாகவுள்ளது. எனக்குறிப்பிட்டுள்ளார்.

மேற்குறிப்பிட்ட பொருட்களோடு வேறும் புராதன காலப் பொருட்களும் இங்கு தெரியவருகிறது.

## புதிய வீ[illegible]

அச்சுவேலி, வி[illegible]ழன்

அச்சுவேலி கிராமசபையில் அச்சுவேலி உலவிற்குளக்கரை பிள்ளையார் கோவில் வீதியை ஒரு பிரதான வீதியாக்கவே[illegible]டும் என்ற தீர்மானம் [illegible]றை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## விலைக்கட்டுப்பாட்டை மீறினர்களாம்!

கோட்டை, வியாழன்

பங்கீட்டுப் புடவைகளைக் கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்கக் கூட்டி விற்ற வியாபாரிகள். பலரது அனுமதிகளை லங்கா சலுசல நேற்று முன்தினம் ரத்துச் செய்துள்ளது,

நேற்று முன்தினம் கேகாலை நுகேகொடை ஆகிய பகுதிகளில் திடீர் பரிசோதனை செய்த சலுசலா அதிகாரிகள், அநேக வியாபாரிகள் துணிவகைகளைக் கட்டுப்பாட்டுவிலைக்குக் கூடுதலாக விற்றதைக் கண்டுபிடித்துள்ளார்கள், இதைத் தொடர்ந்து சலுசலாத் தலைவர்களின் அனுமதியை நீக்கியுள்ளார். இவர்களில் அநேகர் சேட்டுகளை கட்டுப்பாட்டு விலையிலும் பார்க்கக் கூடுதலாக விற்ருர்கள் எனத் தெரியவருகிறது.

திடீர் பரிசோதனை மற்றுமிடங்களிலும் நடைபெற்று வருகிறது.

## 'பிரஜையாகும் வரை சட்டமூலம் [illegible]'

...ட்டார்.

கந்தரோடையில் உதவிக் கல்வியமைச்சர் திரு. துடாவைக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

உதவி அமைச்சர் பேசுகையில் கூறியதாவது:-

'நவம்பர் முதலாம் திகதி முதல் தமிழ்ப்பட்டதாரிகள் பலருக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படும். மேலும் பல ஐராஜரப்பத்திரமற்ற ஆசிரியர்கள் ஜனவரிமாதம் முதல் ஆசிரியராக நியமனம் பெறுவர். இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நவம்பர்முதல் நடைபெறும். வேலையில்லாப் பிரச்னையை இருவருடங்களில் தீர்த்துவைப்பதில் நாம் கடுமையாக உழைக்கிறோம்.'

...டார். அவ்விழாவில் அவர் உரையாற்றுகையில் கூறியதாவது:-

தமிழ், சிங்கள இனங்களிடையே தமது சுயமொழிகளைப் பயில்வதிலும் பார்க்க கூடிய அளவில் ஆங்கிலத்தைக்கற்கவேண்டும் என்ற ஆவல் தலைதூக்கி நிற்கின்றது. இந்நிலை மாறி சுயமொழிகளைப் படிப்பதுடன் தமிழர் சிங்களமும்' சிங்களவர் தமிழும் கற்கும் நிலை ஏற்படவேண்டும். அப்போது தான் கல்விநிலையில் நல்ல முன்னேற்றம் ஏற்படமுடியும்.

வேலையில்லாத் திண்டாட்டம், வாழ்க்கைச் செலவு உயர்ச்சி, மொழிப் பிரச்னை போன்றவை எல்லாம் பொருளாதார வளத்தினை மேம்படுத்துவதன்மூலம் மாற்றிவிடமுடியும். பொருளாதார மந்தநிலையே பிரச்னைகள் வளரக் காரணம்.

தமிழ்-சிங்கள இன ஒற்றுமை வலுப்படவேண்டும். கலாசார வளர்ச்சியில் ஈடுபட்ட அநகாரீகதர்மபால, சித்திலெப்பை, ஆறுமுக நாவலர் போன்றோரும், இன ஒற்றுமையை வளர்த்தசேர் பொன். இராமநாதன், அருணசலம்போன்றோரும் போல நம்மில்பலர் உருவாகவேண்டும் என்றார் அவர்.

உடுவில் எம். பி. திரு வி. தர்மலிங்கம் பேசியதாவது:

1956-ம் ஆண்டுக்கு முன்னர் தமிழ்மக்கள் அமைதியான நிலையில் இருந்தனர். எனவே அன்று சிங்களத்தைக் கற்க வசதியாக இருந்தது. ஆனால் இன்று தமிழர் மத்தியில் அமைதியற்ற நிலை உருவாகியுள்ளது. தமிழர்களுக்கு சிங்களத்தை இந்நிலையில் கற்பிக்க ஆசிரியர்களை அனுப்புவது மேலும் குழப்பத்தையும், பதட்ட நிலையையும் ஏற்படுத்தும்

வன்சா தேவராசா மேற்கண்டவாறு 1968—69-ம் ஆண்டுக்கான தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## 'ஈழநாடு'
## ஆதரவில்
## தீபாவளி விழா

★

விபரங்களுக்கு நாளை ஈழநாடு பத்திரிகையைப் பாருங்கள்

## இன்று

வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலயத்தில் சுக்கிர வாரமாகிய இன்று மாலை 6 மணி முதல் 7 மணி வரை வித்துவான் திரு. க. கி நடராஜன் அவர்களினால் பெரியபுராண விரிவுரைத் தொடரில் "இறைவன் தூது" என்னும் பொருள் பற்றிய கதா பிரசங்கமும், இரவு 7 மணிக்கு சுக்கிர வார அம்மன் பூஜையும் உற்சவமும் நிகழும்

## புதிய வீதி

அச்சுவேலி, வியாழன்

அச்சுவேலி கிராமசபையில் அச்சுவேலி உலவிற் குளக்கரை பிள்ளையார் கோவில் வீதியை ஒரு பிரதான வீதியாக்கவேண்டும் என்ற தீர்மானம் நிறைவேறித் தற்போது வீதியை விசாலமாக்குவதற்குரிய ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

அச்சுவேலி மகாவித்தியாலயத்திற்கருகாமையாகச் செல்லும் இவ்வீதி வல்லை ரோட்டில் அமைந்திருக்கும் யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதியைச் சென்றடையும்

— —

## மனோகரன் உடல்நிலை

சென்னை, அக். 22

சென்னை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ள நாஞ்சில் மனோகரன் எம். பி.யை மத்திய மந்திரி திரு. தினேஷ் சிங் நேற்று சென்று பார்த்தார்

திரு. மனோகரனின் உடல் நிலை தேறிவருகின்றது

## இளம் வழுதி எம். எல். ஏ. காலமானார்

சென்னை, அக். 22

திராவிட முன்னேற்றக் கழக சட்ட மன்ற உறுப்பினர் திரு. இரா இளம்வழுதி நேற்றுக் காலமானார். அவருக்கு வயது 45. கடலூர் தொகுதியிலிருந்து அவர் சட்டமன்றத்திற்குத் தெரிவுசெய்யப்பட்டிருந்தார்.

திராவிட முன்னேற்றக்கழகத்தின் மாணவர் சம்மேளனத்தின் ஸ்தாபகர்களில் இவர் முக்கியமானவர்.

லண்டனில்

## இலங்கைத்தேயிலை விலை இறக்கம்

கொழும்பு, வியா

லண்டன்சந்தையில் இலங்கைத் தேயிலையின் விலை திடீர் வீழ்ச்சியடைந்துள்ளது. கடந்தஜூலையிலிருந்து இம்மாதம்வரை லண்டன் மார்க்கெட்டில் இலங்கைத் தேயிலையின் விலை ஏற்ற இறக்கவித்தியாசம் 11.24 பெனி என அறிவிக்கப்பட்டுள்ளது.

தேயிலை திடீர் விலை இறக்கத்திற்கான காரணத்தைக் கேட்டு லண்டனிலுள்ள இலங்கைத்தேயிலை நிலையத் ...லைப் பிரசார ...தம் எழுதியுள்ளது.

...காலப் பொருட்களும் இங்கு தெரியவருகிறது. ...கள், அநேக வியாபாரிகளின் துணிவகைகளைக் கட்டுப் ... வருகிறது.

# 'பிரஜையாகும் வரை சட்டமூலம் பாதுகாப்பு அளிக்க வேண்டும்'

கொழும்பு, வியாழன்

"நமது நாட்டின் பிரஜாவுரிமைச் சட்டம் இந்தியத் தமிழ் வம்சாவளியினரைக் குறைப்பதற்காகவே ஆக்கப்பட்டிருக்கிறது. இதன்நிமித்தம் இந்த சமூகம் இன்று பல பிரிவுகளாகக் கூறுபோடப்பட்டுள்ளது."

அட்டனில் திரு. வெள்ளையன் தலைமையில் இயங்கும் தேசிய தொழிலாளர் சங்கம் அரசியலமைப்பு விவகார அமைச்சருக்கு சமர்ப்பித்துள்ள மகஜரில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இம் மகஜரில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:-

நாடற்றவர்களில் பெரும்பாலோர் தோட்டத் தொழிலாளரே, இந்திய வம்சாவளிகள், வம்சாவளி அல்லது பதிவுமூலம் பிரஜைகளாக இருந்தாலும் அவர்கள் இந்திய தமிழர் என்று வர்ணிக்கப்பட்டு வேலை கொடுப்பதிலும் காணிகள் கொடுப்பதிலும் பாகுபாடு காட்டப்படுகிறது.

சிறுபான்மை மக்களாகிய இந்திய வம்சாவளியினர், இனம் கலாச்சாரம், மதம் இவைகளால் வேறுபட்டவர்களாய்த் தனிச் சமூகமாக இருக்கிறார்கள். எல்லாப் பிரஜைகளும் எந்த வம்சத்தவரென்றாலும் ஜனநாயகம், சோசலிசம் என்ற வரம்புக்குள் பாகுபாடற்று சமமான பிரஜையாகக் கருதப்ப வேண்டும். வம்சாவழி பதிவுப் பிரஜைகளுக்குள் பாகுபாடற்று எல்லாரும் சமத்துவமான பிரஜைகளாகக் கருதப்படவேண்டும், அவர்களின் உரிமைகளுக்குத் தீங்கு விளைவிக்கும் சட்டங்களைத் திருத்தவேண்டும். நாடற்ற மக்களின் நிலைமைகளைத் தீர்மானிக்கும் வரை அவர்களுக்கு வாக்குரிமையைத் தவிர ஒரு பிரஜைக்குரிய ஏனையஉரிமைகளனைத்தையும் வழங்க வேண்டும். சாதாரண உரிமைகள் உதாரணமாக இலவச அரிசி, கல்வி, வைத்திய வசதி சமமான வேலை வாய்ப்பு இவைகள் எல்லாம் சட்டப்படி வழங்கப்பட வேண்டும்.

நாடற்ற மக்களைப் பொறுத்தவரை சட்டமூலமாக அவர்களுக்கும், அவர்களின் சந்ததிகளுக்கும் சாதாரண குடியுரிமைகள் வழங்கி தங்களின் விருப்பத்திற்கேற்ற நாட்டுப் பிரஜையாகும் வரை சட்டமூலம் பாதுகாப்பளிக்கப்படவேண்டும்.

இந்திய வம்சாவளியினர் அதிகமாகப் பதிவுமூலம் பிரஜைகளாகி இருப்பதினால் அவர்களின் விகிதாசாரப்படி சட்டமூலம் அவர்களுக்கு பிரதிநிதித்துவம்வழங்கப்படவேண்டும். இவர்களின் பாராளுமன்ற உறுப்பினர் தொகை பதிவுப் பிரஜைகளின் தொகைக்கு ஏற்றவாறு இருக்கும்படி சட்டத்தில் ஒரு விசேஷ சரத்தை இயற்றவேண்டும். இவர்களுக்குத் தேவையான பிரதிநிதித்துவம் வழங்காத பட்சத்தில் மிகுதியை பிரதமரின் விருப்பப்படியல்லாது பாராளுமன்ற அங்கத்தவர்களின் வாக்குமூலம் தேவையான பிரதிநிதித்துவம் வழங்கப்பட வேண்டும்.

# "பாலஸ்தீன மக்களின் புரட்சியே முடிவைத் தரும்"

### அல்பதஹ் ஆதரவிாக்கத் தலைவர் கருத்து

யாழ்ப்பாணம், வெள்ளி

ஏகாதிபத்திய வாதிகளினால்சிருஷ்டிக்கப்பட்டதே இஸ்ரேல். பாலஸ்தீன மக்களினது பிரச்னைகளை ஏகாதிபத்திய வாதிகளினால் தாபிக்கப்பட்ட ஐநாஸ்தாபனத்தினாற்கூட தீர்க்கமுடியாது. பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் ஆயுதப் புரட்சியே இதற்கொருமுடிவைக் காணமுடியும்'

இவ்வாறு நேற்று யாழ்ப்பாணம் ஜின்னா மைதானத்தில் நடைபெற்ற அல்பதாஹ் இயக்கக்கூட்டத்தில் உரையாற்றிய இலங்கைப் பாலஸ்தீன ஆதரவு இயக்கத் தலைவர் திரு ஏச் எல் கே கரவிட்ட பேசும்போது தெரிவித்தார்.

பாலஸ்தீன ஆதரவு இயக்கச் செயலாளர் ஜனாப் எம். ஏ சாலி பேசும்போது குறிப்பிட்டதாவது:-

இலங்கை அரசாங்கம் அரபு மக்களுக்கு ஆதரவு கொடுப்பதானால் இஸ்ரேலுடைய தொடர்பை முற்றாக நீக்கவேண்டும். 67-ம் ஆண்டு யுத்தத்துக்கு முன்னுள்ள எல்லைக்கு இஸ்ரேல் அரபு நாடுகள் செல்லவேண்டுமென்றுசொல்வதில் அர்த்தமில்லை. இஸ்ரேலை அங்கீகரிக்காமலிருப்பதே அரபு மக்களுக்கு அது காட்டக்கூடிய ஆதரவாகும்'

'தொழிலாளி' ஆசிரியர் திரு இளங்கீரன் பேசுகையில் தெரிவித்தவை வருமாறு:

பாலஸ்தீன விடுதலை இயக்கப் போராட்டம் நியாயத்தின் அடிப்படையில் அமைந்தது. ஆயுதம்தாங்கிய அதனது தாயக மீட்புப் போராட்டம் அரபுநாடுகளைக் கபடத்தனமாக அபகரிக்க எண்ணும் ஏகாதிபத்தியத்துக்கு அதிர்ச்சியைக் கொடுத்துள்ளது

திரு வி ஏ கந்தசாமி ஜனாப் எஸ் ஏச் நிஸ்தார் ஜனாப் எஸ் ஏச் மஃரூக் ஆகியோர்களும் பேசினர்.

## இன்று பணஒதுக்கீட்டுச் சட்டமூலம் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்

கொழும்பு, வியா.

அடுத்த நிதியாண்டுக்கான பணஒதுக்கீட்டுச்சட்டமூலத்தை நிதியமைச்சர் டாக்டர் என் எம் பெரேரா நாளை மக்கள்சபையில் சமர்ப்பிப்பார்.

இதுசம்பந்தப்பட்ட விவாதம் நவம்பர் மாதம் 1-ந் திகதி தொடங்கி 4-ந் திகதி வரை நடைபெற்று மீண்டும் 7-ம் திகதி தொடங்கி நவம்பர் 11-ந் திகதி வரை நீடிக்குமென்றும் அன்றிரவு 8 மணியளவில் வாக்கெடுப்புக்கு விடப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளன.

## கொப்பியின் விலை 12 சதம்

கொழும்பு, வியா

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக்கொப்பிகளின் விலை குறைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

40 பக்கங்களையுடைய சாதாரண அப்பியாசக் கொப்பியின்விலை 12 சதமாகவும்80 பக்கக் கொப்பியின் விலை 24 சதமாகவும் விற்கப்படும்.

# பொருளாதார விருத்திக்கு சோஷலிசமே சிறந்த வழி

யாழ்ப்பாணம், வெள்ளி

'தேசிய செல்வங்களைப் பயன்படுத்தி நாட்டின் பொருளாதார விருத்திக்கான சோசலிச கல்வி அமைப்பே இடம்பெறவேண்டும். உயர்தர வகுப்பு மாணவர்கள் இதை அடிப்படையாகக் கொண்டு கல்விகற்க ஒழுங்கு செய்வோம். சாதி சமய மொழிப் பாகுபாடில்லாது அவரவர் தாய்மொழி மூலம் பல்கலைக்கழகங்கள் வரை கல்வி பெற இவ்வரசாங்கம் சகல நடவடிக்கையையும் எடுத்து வருகிறது'

இவ்வாறு யாழ். இந்துக் கல்லூரி எச். எஸ். சி, யூனியன் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசிய உதவிக் கல்வி அமைச்சர் திரு. பி. வை. துடாவ கூறினார்.

திரு. ரி. பிரகதீஸ்வரன் தலைமையில் 'குமாரசாமி' மண்டபத்தில் நடைபெற்ற இக் கூட்டத்தில் உதவி அமைச்சர் மேலும் பேசுகையில்:- 'சோஷலிச அமைப்புக்கல்விதான் இந்தநாட்டின் இளைஞர்களை முன்னேற்றப்பாதையில் கொண்டு செல்லும். முன்னைய அரசாங்கம் வகுத்த கல்வித்திட்டங்கள் முதலாளித்துவ சமுதாயத்தைவளர்த்ததேதவிர ஏழை மாணவரின் கல்விக்கு எத்தவித வசதியுமளிக்கவில்லை. பல்கலைக்கழக வகுப்பு மாணவர்களின் தெரிவு திறமையின் அடிப்படையைக் கொண்டதாகவே இருக்கும் என்று கூறினார்.

முதலாளித்துவ நாடுகளிலே வேலையில்லாத இளைஞர்கள் பெருகுவதை நாம் காணக்கூடியதாக இருக்கிறதென்றும், மக்கள் கல்வி கற்பதன் நோக்கமே உத்தியோகத்தை நாடித்தான், எனவே பயிலும் கல்வி அவர்களின் வருங்கால வாழ்க்கைக்கு வித்திடக் கூடியதாக அமைய வேண்டும். எல்லா சோஷலிச நாடுகளிலும் மாணவர்கள் தமது பல்கலைக்கழகப் படிப்பு முடிந்ததும் வேலை தேடக்கூடியதாகவுள்ளது- ஆனால் இந்த நாட்டில் மட்டும் எந்த ஸ்தாபனங்களிலும் வேலை இல்லை என்ற 'போட்' தொங்க விடப்பட்டுள்ளது.

தொடர்ந்து அவர் மொழி விஷயமாகப் பேசியதாவது: இன்று சிங்கள மகா வித்தியாலய விஜயத்தின் போது அங்கு தமிழ்மொழி ஆசிரியரை நியமிக்கும்படி என்னைகேட்டனர். நான் யாழ்ப்பாணத்தில் பற்பல இடங்களிலும்சென்றசமயம் அங்கு சிங்கள ஆசிரியரை நியமிக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். பரஸ்பரமாக தமிழர் சிங்களத்தையும் சிங்களவ தமிழையும் படிக்கவிரும்புவதை என்னால் உணரமுடிகிறது

இனம், மொழி, சமயம் என்று கூறுபோட்டு எவரையும் ஏமாற்ற இந்த அரசாங்கம் அனுமதிக்காது.

கடல்படு திரவியங்கள் சூழ்ந்த இந்த நாட்டின் கடல்பற்றி எந்தவித ஆராய்ச்சிகளையும் உயர்கல்விப் பீடங்கள் மேற்கொள்ளவில்லை.

கூட்டத்திற்கு வடமாநில கல்வி அதிகாரி திரு. சங்கரலிங்கம், திரு வி. பொன்னம்பலம், திரு எம் வி சுப்பிரமணியம்ஆகியோர் சமூகமளித்திருந்தனர்.

திரு ஏ ஜயந்தன் நன்றியுரை கூறினார்

திரு சரவணமுத்து இல்லத்தில்தேநீர்விருந்து அளிக்கப்பட்டது

(கு வி ம- திரு நி

# 'கிராம பாடசாலைகளுக்கு விஞ்ஞான ஆய்வுகூடங்கள்'

மாவிட்டபுரம், வியாழன்

"இந்நாட்டில் நகரப்புறங்களில் விஞ்ஞானத்துறை வளர்ச்சியடைவதுபோல கிராமப் புறங்களிலும் விஞ்ஞான கல்விவளர்ச்சிபெற்று கிராம மக்களும் உயர் பதவிகள் பெறக்கூடியதாக திட்டங்களை நம் அரசு வகுக்க இருக்கிறது."

கல்விஉதவிஅமைச்சர் திரு. பி. வை. துடாவை பலாலி சித்தி விநாயகர். வித்தியாசாலை மண்டபத்தில் மேற்படி வித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்கத்தினரால் நடத்தப்பட்ட வரவேற்புக் கூட்டத்தில் கூறினார்.

உதவி அமைச்சரும், அவரது பாரியாரும் மற்றும் ஐக்கிய முன்னணி அரசு பிரமுகர்ளும் பலாலி விமான நிலையத்திலிருந்து மேற்படி பாடசாலைக்கு அழைத்து வரப்பட்டதையடுத்து வடமாநில வித்தியாதிபதி திரு. எஸ். சங்கரலிங்கம் தலைமையில் நடந்த இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில்:

இன்று வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் உபகரணங்கள் தட்டுப்பாடும் கட்டிடங்கள் நல்ல முறையில் அமையவில்லை எனவும் புகார்கள் கூறப்பட்டிருந்தது. இப்புகார்களையிட்டு நடவடிக்கை எடுத்து தமிழ் பிள்ளைகளுக்கும் தக்கஇடம் அளிக்க இவ்வரசின் உதவி அமைச்சராக இங்கு வந்துள்ளேன்.

இந்த அரசு புதிய கொள்கையுடன் புதியமுறையில் நாட்டைமுன்னேற்ற முனைந்துள்ளது. சென்ற அரசு மேற்கொண்ட கொள்கைகளையோ செயல் திட்டங்களை இவ் அரசுமேற்கொள்ள முடியாமல் இருக்கிறது. ஏனெனில் முந்திய அரசு மேற்கொண்ட திட்டங்களை மக்கள்ஆதரிக்காததால் தான் அவ்வரசை இம்முறை மக்கள் புறக்கணித்தனர்.

நகரப்புறங்களில் உள்ள உயர் மாணவர்கள் பயன் அடையக்கூடியதாக விஞ்ஞானத்துறையில் முன்னேற்றம் இதுவரை ஏற்படுத்தப்பட்டதே தவிர கிராமப் புறங்களில் ...

(4-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாவகச்சேரி நகர சபை

## கேள்விப் பத்திர விளம்பரம்

கீழே விபரிக்கப்படும் வேலைகள் செய்து முடிப்பதற்கு இந்நகர சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் அழைக்கப்படுகின்றன.

### வேலைகள்

1. 6-ம் 7-ம் வட்டாரம் நுணுவில் — கல்வயல் ஊமைரல்லே வீதி தாபரிப்பு.
2. 8-ம் வட்டாரம் கண்ணுடிப்பிட்டி மயானத்திற்கு மதிற்சுவர் கட்டுவதற்கு.
3. 6-ம் வட்டாரம் நாவற்பள்ளம் வீதி 600 அடி தாபரிப்பு.
4. 11-ம் வட்டாரம் சப்பச்சிமாவடிப் பிள்ளையார் கோவில் வீதி தாபரிப்பு.
5. 1-ம் வட்டாரம் பங்களா வீதியிலிருந்து உடையார்வளவு வரையுள்ள 500 அடி தூரத்திற்கு தாபரிப்பு.
6. 8-ம் வட்டாரம் கட்டுக்காணி 1-ம் ஒழுங்கை (மகாத்மாகாந்தி ரூட்) 450 அடி தாபரிப்பு.

கேள்விப்பத்திரங்கள் 10-11-70-ந் திகதி நண்பகல் 12 மணி வரையும் இந்நகரசபை அலுவலகத்தில் கொடுக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் யாவும் காகித உறைக்குள் வைக்கப்பட்டு, உறையின் மேற்பக்கத்தில் இடதுபுறமாக அவ்வவ் வேலைக்குரிய பெயரை எழுதி தலைவர், நகரசபை, சாவகச்சேரி என விலாசமிட்டு உறைக்கு மெழுகு போட்டு அடையாளம் வைத்து 1970-ம் ஆண்டு நவம்பர் மாதம் 11-ந் திகதி நண்பகல் 12-00 மணிக்கு முன் இந்நகரசபை அலுவலகத்திலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டிக்குள் போடவேண்டும். அல்லது பதிவு செய்து அனுப்பவேண்டும்.

இவைகளைப் பற்றி இன்னும் விபரங்கள் அறிய வேண்டின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

சு. கனகரத்தினம்,
தலைவர்,
நகரசபை,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
18-10-70. 2526

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா நாட்களில் 4 காட்சிகள்
சிவாஜி-பானுமதி
நடித்த

யாழ். மாநகர சபை

## பதவி வெற்றிடம்

யாழ். மாநகர சபையில் மேல் வரும் உத்தியோகங்களுக்கு யாழ். மாநகரசபை ஆணையாளரால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. பாதுகாவலர் ஒருவர் (செக்கியூரிற்றிகாட்).

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்போர் 1-11-70ல் 45வயதுக்குட்பட்டும், பொலிஸ் படை, கடற்படை, தரைப் படை ஆகிய ஒன்றில் குறைந்தது 5 வருட அனுபவமுடையவராகவுமிருத்தல் அவசியம். சிங்கள அறிவு அனுகூலமாயிருக்கும்.

சம்பள அளவு வருடமொன்று ரூபா 720—36—ரூ. 1,200.

2. காவலர் இருவர்.

மேற்படி பதவிக்கு விண்ணப்பிப்போர் பொலிஸ் படை, கடற்படை, தரைப்படை ஆகிய ஒன்றின் சேவையிலிருந்து ஓய்வு பெற்ற 50 வயதுக்குட்பட்டவராயிருத்தல் வேண்டும்.

வருடச் சம்பள அளவு: ரூபா 540—10X30உம் 1X24 — ரூ. 864.

விண்ணப்பங்கள் 31-10-70க்குப் பிந்தாமல் கிடைக்கக் கூடியதாக மாநகரசபை ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.

ஏ. ரி சுந்தரம்;
ஆணையாளர்,
மாநகரசபை,
யாழ்ப்பாணம்

மாநகரசபை அலுவலகம்,
நகரமண்டபம்,
யாழ்ப்பாணம்,
அக்டோபர் 20-1970. 2525

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி 6-30, 9-30
போயா, பிரீபோயா 2-30
எம். ஆர். ராதா — ஸ்ரீரஞ்சனி
நடித்த
ரத்தக்கண்ணீர்

ஸ்ரீகாலிங்கன்
இணுவில்
தினசரி 2-30, 6-30, 9-30
நாகேஷ் — கே. ஆர். விஜயா
நடித்த
யாருக்காக அழுதான்

REGAL
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya days 4 Shows
Glen Ford,
Stella, Stevens

மன்னார் தேர்தல் ஆட்சேப வழக்கு

# 'இந்தியாவிற்குபோகப்போவதாக நான் ரஹிமிடம் சொன்னேன்'

## மஜித் மௌலவி தொடர்ந்து சாட்சியம்

யாழ்ப்பாணம், வெள்ளி

"ரஹீம் வீட்டிற்குப் போய் இந்தியா விற்கு போகப் போவதாகச் சொன்னேன். வழக்குத் தவணை இருக்கிறதே எப்படி வரப்போகிறீர் என்ருர். விரைவில்வந்துவிடுவதாகச்சொன்னேன். 12-ம் தேதி கப்பலில் வந்து தலைமன்னாரில் தங்கிமறுநாள் காலை எனது அறைக்கு வந்தேன். அப்போது அறைச்சொந்தக்காரர்எனக்கு வழக்குக் கட்டளைதர வந்து தேடிப்போனதாகச் சொன்ஞர். நான் உடனே போம் ரஹீமைச் சந்தித்தேன்."

மன்னார் தேர்தல்ஆட்சேப வழக்கு விசாரணை 6-வது தினமாக சென்றசெவ்வாய்க் கிழமை யாழ்ப்பாணத் தேர்தல் நிதிமன்றத்தில் நீதியரசர் வின்சன் தாமோதரம் முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டபோது குறுக்குவிசாரணையில் மஜித் மௌலவி மேற்கண்டவாறு கூறிஞர்.

மஜித் மௌலவி தொடர்ந்து கூறியதாவது: நான் ரஹீமைச்சந்தித்தேன். கட்டளை பெற்றுக்கொள்ளவில்லை. என்ன செய்வது என்றேன். 14-ம் திகதி அங்குவாருங்கள், அப்புக்காத்துடன் கதைப்போம் என்ருர்.

வழ: இந்கவழக்கில்பொய்ச்சாட்சியம் சொல்லும் நோக்கத்திற்காக ரஹீம் தான் உம்மை பராமரித்து வந்தார். என்கிறேன்? இல்ல்,

இக்கட்டத்தில் மனுதார் சார்பில் ஆஜரான அட்வகேட் இசடீன் மொகமட், மஜித் மௌலவியை மறு விசாரணை செய்தார்.

வழ: தராதரப்பத்திரம் இருக்கிறதா?- ஆம்

வழ: இந்த தராதரப் பத்திரத்தை சிறிது காலத்திற்கு வைத்திருக்கலாமா?- அதற்கு ஆதாரம் தந்தால் நல்லது.

(மௌலவியின் தராதரப் பத்திரத்தை அட்வகேட் இசடின் மொகமட், கோர்ட்டில் சமர்ப்பித்தார். நீதியரசரும், எதிர்மனுதாரின் வழக்கறிஞர் திரு. எம். திருச்செல்வமும், மஜித் மௌலவியின் தராதரப்பத்திரத்தைப் பார்வையிட்டனர்)

வழ: இலங்கைப்பிரஜா உரிமை பற்றி அத்தாட்சிப் பத்திரம் இருக்கிறதா?- ஆம்

வழ: யாரால் வழங்கப்பட்டது?- மட்டக்களப்பு அராங்க அதிபரால்

வழ எப்பொழுது? 1955ல்

[மௌலவி மஜித்தின் பிரஜா உருமைப் பத்திரம் மனுதாரின் வழக்கறிஞரால் கோர்ட்டில் சமர்ப்பிக்கப்பட்டது]

வழ: சமீபத்தில் இந்தியாவிற்குப் போனீர்? ஆம்

வழ; டிக்கட் பெறுவதற்கு துண்டு தரப்பட்டதாகக் கூறினீர்? ஆம்

வழ: அதைப்பற்றி அத்தாட்சிப்பத்திரம் உண்டா? ஆம்.

(அத்தாட்சிப் பத்திரத்தை நீதியரசர் பார்வையிட்டார்)

வழ: பள்ளிவாசல் முஸ்லீம்கள் தொழுகை செய்யும் இடம்?- ஆம்:

வழ: வீட்டிலும் தொழ முடியுமா? தொழமுடியும்.

வழ: நேரம் கழித்துசெல்பவர் பள்ளியில் தனியாக தொழமுடியும் ஆம்

வழ: தனியாக ஜும்மா தொழுகையை செய்யலாமா?- முடியாது

வழ: அது ஒரு கூட்டுத் தொழுகை?- ஆம்.

வழ; ஒரு முஸ்லீம், மத்தியானம் பள்ளிக்கு போக முடியாமலிருந்தால், வேறு இடந்திலிருந்து தொழ முடியுமா?- ஆம்.

வழ; மார்க்கம் ஆரம்பித்த காலத்திலிருந்து போதனைகளை எப்படிச் சொல்வது?- கதீஸ்

வழ: அதில் பல தொகுப்புகள் உண்டு?- ஆம்

வழ: பள்ளிவாசலைத்தவிர வேறு இடங்களிலும் கதீஸ் சொல்லலாமா?- ஆம்.

வழ: ஜும்மாதொழுகைக்குப்பின் கதீஸ் நடக்கும்?- ஆம்.

வழ; கதீஸ் சொல்வது மூலம் சில பாக்கியங்கள் கிடைக்குமா?- ஆம்.

வழ: கதீஸ் கேட்பவர்களுக்கு?- அவர்களுக்கு பன்மடங்கு பாக்கியம்

நீதி: மே 15-ம் தேதி கதீஸ் சொன்னீர்?-ஆம்.

மேல் விசாரணை இம் மாதம் 23-ம் தேதி காலை 9-30 மணிக்குத் தொடர்ந்து நடைபெறும்,

## யாழ் இந்து கொக்குவில் இந்து கோஷ்டிகள் வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண பாடசாலை விளையாட்டுச் சங்கத்தின் அனுசரணையின் கீழ், யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்று வரும் முதல் பிரிவு உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில், நேற்று முன் தினம் நடைபெற்ற ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரியும், யாழ். இந்துக் கல்லூரியும் வெற்றி பெற்றன.

கொக்குவில் இந்துவுக்கும், உரும்பிராய் இந்துவுக்கு [illegible]டயில் நடைபெற்ற ஆட்டம் ரசிப்பாகவே காணப்பட்டது இடைவேளைக்கு முன் உரும்பிராய் கோஷ்டியின் பின்னணி வீரர்களின் [illegible]ால், கொக்குவில் கோஷ்டியினர் ஒரு கோலைப் போ

இடைவேளைக்கு முன்பாகவும் இடைவேளைக்குப் பின்பாகவும் யாழ் இந்துக் கல்லூரி இரு கோல்களைப் போட்டது. ஆட்டம் முடிவடைவதற்கு சில நிமிடங்கள் இருக்கும் போது சிதம்பரா கல்லூரியும் ஒரு கோலைப் போட்டது.

இப்போட்டிக்கு திரு. ஞானப்பிரகாசம் மத்தியஸ்தராகக் கடமையாற்றிஞர்.

...... (தே. நி)

## உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

மாவிட்டபுரம், வியாழன்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் காங்கேசன் துறை நடேஸ்வராக்கல்லூரியும் மோதிய உதைபந்தாட்டப் போட்டியில்

## உதைபந்தாட்டப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

கடந்த சில நாட்களாக யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டிகளின் முடிவுகள் சில வருமாறு:

### யாழ். பொலிஸ் வெற்றி

யாழ்ப்பாண பொலிஸ் உதைபந்தாட்டத் தெரிவுக் கோஷ்டிக்கும், தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் பொலிஸ் கோஷ்டி 2—0 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டி மகாஜனக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது

### யாழ். மாநகரசபை வெற்றி

யாழ் மாநகரசபை உதைபந்தாட்டக் கோஷ்டிக்கும் காரைநகர் உதைபந்தாட்டக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில், மாநகரசபைக் கோஷ்டி 6—0 கோல்களால் வெற்றி பெற்றது இப் போட்டி, யாழ் விளையாட்டரங்கில் நடைபெற்றது.

யாழ். மாநகரசபைக் கோஷ்டிக்கும் 'சம்சுன்' விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் மாநகரசபைக் கோஷ்டி 3—0 கோல்களால் வெற்றி பெற்றது.

யாழ் மாநகரசபைக் கோஷ்டிக்கும், யாழ். பொலிஸ் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற ரசிப்பான போட்டியில் மாநகர சபைக் கோஷ்டி 3—1 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டி யாழ். கோட்டை மைதானத்தில் நடைபெற்றது.

### றெக்கிளமேசன் வெற்றி

குருநகர் றெக்கிளமேசன் சனசமூக நிலையத்துக்கும், யாழ் பொலிஸ் உதைபந்தாட்டக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற ஆட்டத்தில் றெக்கிளமேசன் கோஷ்டி 5—0 கோல்களால் வெற்றி பெற்றது. இப்போட்டி யாழ் கோட்டை மைதானத்தில் நடைபெற்றது. (தே. நி)

— —

## மின்சாரத்தால்

உதைபந்தாட்டம்:

## இரு பிரிவிலும் இளவாலை என்றியரசர் வெற்றி

பண்டத்தரிப்பு, வியா.

இளவாலை என்றியரசர் கல்லூரிக்கும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரிக்குமிடையே நடைபெற்ற சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இரு பிரிவினரின் ஆட்டமும் ஆரம்பமுதல் முடிவு வரை ரசிப்பாகவும் விறுவிறுப்பாகவும் இருந்தது.

2-ம் பிரிவினருக்கான ஆட்டத்தில் மிகுந்த சிரமப்பட்டு என்றியரசர் கல்லூரியினர் 1 கோலைமட்டும் போட்டனர். யாழ்ப்பாணக் கல்லூரியினர் ஒருகோலும் போடவில்லை. 1ம் பிரிவினருக்கான ஆட்டத்தில் இரு கல்லூரிகளுக்கும் கோல்களைப் போடும் சந்தர்ப்பம் அதிகம் இருந்தும் என்றியரசர் கல்லூரியினர் ஒரு கோலை மட்டும் போடமுடிந்தது யாழ்ப்பாணக் கல்லூரியினர் ஒரு கோலும் போடவில்லை,

இரு ஆட்டங்களிலும் என்றியரசர் கல்லூரியினர் வெற்றிபெற்றனர், யாழ்ப்பாணக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் இவ்வாட்டம் நடைபெற்றது.

— —

## விவசாய அபிவிருத்தி யோசனைகள்

அம்பன், வியாழன்

1971-ம் ஆண்டுக்குரிய விவசாய அபிவிருத்தி யோசனைகள் செயற்படுதிட்டம் என்ற புத்தகத்தை வடமராட்சி வடக்குக் கிழக்குக்காரியாதிகாரி பிரிவினர் வெளியிட்டுள்ளனர். இதில் வடமராட்சி வடக்குக் கிழக்குக் காரியாதிகாரி பிரிவில் 1971-ம் ஆண்டு காலபோகத்தில்பயிர்செய்ய எதிர்பார்க்கப்படும் விஸ்தீரணமும் ஏக்கரின் சராசரி விளைவும், உற்பத்தியும் இவற்றிற்காக உபயோகிக்கப்படவிருக்கும் செயற்கை உரம், உபகரணங்கள், கடன் தேவைகள் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளன. இச் செயற்படுதிட்டம் மேற்படி காரியாதிகாரி பிரிவிலுள்ள பயிர்ச்செய்கைக் குழுக்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் அமைப்புக்கேற்பவே வகுக்கப்பட்டுள்ளன.

## சனசமூக நிலைய நிர்வாகிகள்

பண்டத்தரிப்பு, வியாழன்

சிறுவிளான் கிழக்கு சனசமூகநிலைய வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்றபோது பின்வருவோர் நடப்பு வருட உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்பட்டனர் தலைவ: திரு க இராசநாயகம், உபதலைவர்: ச. சந்திரபாலன், காரியதரிசி: திரு: நா. பாலசேகரம் உபகாரியதரிசி: வே. செல்வராசா, பொருளாளர்: வ. கணபதிப்பிள்ளை, உபபொருளாளர்: நா: இரத்தினசிங்கம், விளையாட்டு நிர்வாகி: அ. செல்வரட்னம் நாடக நிர்வாகி: நா. பற்குணராசா.

ஏழு பேர் கொண்ட நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது.

......

## கடல்கண்டி களவு

எழுதுமட்டுவாள், வியா

மீனவர்கள் கடலில் மீன் பிடிப்பதற்காக கட்டப்படும் கடல்கண்டி களவாடப்பட்டு வருகிறதாம். கைதடி நாவற்குழி மகாவிஷ்ணு மீன்பிடிச் சங்கத்தார் மீன் பிடிப்பதற்காக கேரதீவுக் கடலில் நாட்டும் கடல்கண்டி இரவில் சில விஷமிகளால் பிடுங்கி எறியப்படுகிறது என்றும் கூறப்படுகிறது.

கைத்தறி நெசவாளர்களுக்கு
ஓர் அறிவித்தல்
உங்களிடம் உற்பத்தியாகும் எந்தவிதமான கைத்தறி ஜவுளிகளையும் பெறுமதியான விலைகளுக்கு எம்மிடம் விற்பனை செய்யலாம்.
S. R. S.
ஜவுளி மாளிகை
எஸ். ஆர். செல்லத்துரை.
216, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 296

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
போயா நாட்களில் 4 காட்சிகள்
சிவாஜி-பானுமதி
நடித்த
அறிவாளி

REGAL
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p.m
Poya days 4 Shows
Glen Ford,
Stella, Stevens
in
RAGE

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர்—லட்சுமி
ஜெயலலிதா — அசோகன்
நடித்த
மாட்டுக்கார வேலன்

வின்ஸர் (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினி கணேசன்-காஞ்சனா
நாகேஷ்-மஞ்சுளா
நடித்த
சாந்தி நிலையம்

8-வது வாரம்
வெலிங்டன் யாழ்.நகர்
(2-30, 6-30, 9-30) போயா தினங்களில் 4 காட்சிகள்

தாய்க்குலத்தின் பெருமைக்கும் தமிழகத்தின் மாண்புக்கும் உதாரணமாய் வாழ்ந்த விஜயாவின் உள்ளத்தை உருக்கும் கண்ணீர் காவியம்.
உணர்ச்சி ஓவியம் . . .
★ ஏ.வி.எம்.ராஜன்
இந்திய ஜனாதிபதியின் 'ஊர்வசி' பரிசுபெற்ற ★ சாரதா
காஞ்சனா, முத்துராமன், ரி. எஸ். பாலையா,
நாகேஷ், சுந்தரராஜன், பேபி ரோஜாரமணி
நடித்த
ஸ்ரீ விநாயகா சுப்ரீயா கம்பைன்ஸ்
துலாபாரம்
(தமிழ்)
டைரக்ஷன்: வின்ஸன்ட்
(1969-ம் ஆண்டின் சிறந்த இயக்குனர்)

கெப்பிட்டல் (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
வெகு விரைவில் வெலிங்டன் யாழ்ப்பாணம்
★ சிவாஜி ★ சௌகார் ஜானகி
சிவகுமார், வாணிஸ்ரீ, பாரதி
மற்றும் பலர் நடித்த
ஏ. வி. எம். புரடக்ஷன்ஸ்
உயர்ந்த மனிதன்
[1968-ம் ஆண்டின் சிறந்த படத்திற்குரிய பாராட்டைப் பெற்றது]


நல்லது.

(மௌலவியின் தராதரப் பத்திரத்தை அட்வகேட் இசடின் மொகமட், கோர்ட்டில் சமர்ப்பித்தார். நீதியரசரும், எதிர்மனுதாரின் வழக்கறிஞர் திரு. எம்.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வெள்ளி 23—10—70

(செய்திகள்: காலை 6-45, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

344 மீ. அன்ட் 61 மீ.

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவ நற்சிந்தனை, 6-30 இஸ்லாமியநற்சிந்தனை, 6-35 துதிப்பாடல்கள், 7-15 பண்ணுரிந்தமிழ், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

344 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 தொழிலாளர் கேட்டவை, 1-00 கதம்ப இசை.

344 மீ. அன்ட் 61 மீ

மாலை 4-25 கல்விஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 வளரும்பயிர்.

இரவு 6-15 இசைப்பயிற்சி, 6-30 துதிப்பாடல்கள், 7-00 வாத்திய இசை, 7-45 செய்திச்சுருள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 விளையாட்டு, 9-40 நாதஸ்வரம், 10-30 செய்தித் தொகுப்பு.


MANOHARA
Jaffna
Daily 4-45, 7 & 9-45 p m
Poya, Pre-poya 4 Shows
Peter Cushing
in
FRANKENSTEIN MUST BE DESTROYED


...ஆட்டம் ரசிப்பாகவே காணப்பட்டது இடைவேளைக்கு முன் உரும்பிராய் கோஷ்டியின் பின்னணி வீரர்களின் சிறுதவறினால், கொக்குவில் கோஷ்டியினர் ஒரு கோலைப் போட்டு விட்டனர்.

இந்தப் போட்டியின் முடிவில், கொக்குவில் இந்துக் கல்லூரி உரும்பிராய் இந்துக் கல்லூரியை 1—0 கோலால் வெற்றி பெற்றது.

இப் போட்டிக்கு திரு. ஈ. கே. குமரையா மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

### யாழ். இந்து வெற்றி

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும், வல்வெட்டித்துறை சிதம்பரா கல்லூரிக்குமிடையில் நடைபெற்ற மற்றுமொரு ஆட்டத்தில் யாழ் இந்து வெற்றி பெற்றது.

இந்தப் போட்டியில்

## நெல்லியடி வெற்றி

பருத்தித்துறை, வியா.

நெல்லியடி மத்தியமகா வித்தியாலய இரண்டாம் பிரிவு கோஷ்டிக்கும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரிக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப்போட்டியில் நெல்லியடிக் கோஷ்டி 3—0 கோல்களால் வெற்றியீட்டியது. இப்போட்டிக்கு திரு. எஸ் சண்முகநாதன் மத்தியஸ்தம் வகித்தார்.

மாணுண்டி கோஷ்டிக்கும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயக் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற மூன்றும் பிரிவுப் போட்டியிலும் நெல்லியடி 3—0 கோல்களால் வென்றது. திரு. எஸ். வித்தியாதரன் மத்தியஸ்தம் வகித்தார்

## சுற்றுப்போட்டி

மாவிட்டபுரம், வியாழன்

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் காங்கேசன்துறை நடேஸ்வாக்கல்லூரியும் மோதிய உதைபந்தாட்டப் போட்டியில் நடேஸ்வரா 2—1 கோல்களால் வெற்றியீட்டியது

யாழ் பாடசாலைகள் விளையாட்டுச்சங்க ஆதரவில் நடைபெற்று வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் 3-ம் பிரிவில் ஓர் அங்கமாக அமைந்த இப்போட்டி ஆரம்ப முதல் இறுதிவரை விறுவிறுப்பாகக் காணப்பட்டது.

இச்சுற்றுப் போட்டியின் கீழ் 3-ம் பிரிவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் மோதிய போட்டியில் மகாஜன 4 0 கோல்களால் வெற்றி பெற்றது.

மேற்படி கல்லூரிகளின் 2-ம் பிரிவுக் கோஷ்டிகளுக்கிடையே நடைபெற்ற போட்டியில் மகாஜன வீரர் சிவானந்தராசா அடுத்தடுத்து 2 கோலைப் போட்டார். இப்போட்டியில் மகாஜன 2 1 கோலால் விக்ரோறியாவை வெற்றிகொண்டது இப்போட்டிக்கு எஸ், கனகலிங்கம் நடுவராகக் கடமையாற்றினர். ......

## வெற்றிலை செய்கை

பண்டத்தரிப்பு, வியாழன்

மாவிட்டபுரம், இளவாலை கருவம்மனை பன்னலை போன்ற இடங்களில் இம்முறை பெருமளவில் வெற்றிலைச் செய்கை பண்ண இப்பகுதி விவசாயிகள் ஏற்பாடுகள்செய்கிறார்கள் கடந்தவருடங்களில் பெருந் தொகையாக வெற்றிலைத் தேட்டங்கள் ஒரு வித முவினால் சேதமாக்கப்பட்டன.

...வெற்றி பெற்றது. இப்போட்டி யாழ் கோட்டை மைதானத்தில் நடைபெற்றது. (தே. நி)

## மின்சாரத்தால் தாக்குண்டு மரணம்

பருத்தித்துறை, வியாழன்

மின்சாரத்தால் தாக்குண்ட ஒருவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்த பரிதாப நிகழ்ச்சி பருத்தித்துறை நகரில் செவ்வாய் மாலை நடைபெற்றது. சரிந்திருந்து, நிமிர்த்தபபட்ட ஒரு மின்சாரக் கம்பத்தருகால் சென்ற இறந்த எஸ். சுந்தரம் என்பவர் தற்செயலாக அதைத்தொட்டதன் விளைவாகஏற்பட்ட அதிர்ச்சியால் ஸ்தலத்திலேயே இறந்தார்.

பருத்தித்துறைப் பொலிசார் ஸ்தலத்துக்கு விரைந்து சென்று புலன்விசாரணை செய்தனர். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். இராமநாதன் விபத்தினால் ஏற்பட்ட மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

...பயிர்ச்செய்கைக் குழுக்கள், பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் அமைப்புக்கேற்பவே வகுக்கப்பட்டுள்ளன.


ஜவுளி மாளிகை
எஸ். ஆர். செல்லத்துரை,
216, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.
போன்: 296

தீபாவளி மலிவு விற்பனை!
உங்களுக்கும் உங்கள் குழந்தைச்செல்வங்களுக்கும் உகந்த
★ கைத்தறி டெக்கா ★ பிறின்ரட் நைலக்ஸ்
★ சிலோன்மணிப்புரி ★ பிளேன் நைலக்ஸ்
★ பிளேன்வோயில் ★ பிறின்ரட் வோயில்
★ ஜொயின்ட் நைலக்ஸ் ★ றெடிமேட்புளவ்ஸ்
சேட்டிங் — சூட்டிங் — சன்சூட்ஸ்
மற்றும்
சகலவிதமான ஜவுளி வகைகளும்
கண்கவர் வண்ணக்கலர்களில் எமது கைவசமுண்டு.
உங்களின் தீபாவளித் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள எம்மிடம் விஜயம் செய்யுங்கள்.
சீப்சைட்
வடஇலங்கையின் புகழ்பெற்ற புடவை மாளிகை)
186-188, கே. கே. எஸ். ரோட் — யாழ்ப்பாணம்.

போலிகள் ஜாக்கிரதை
ராதா பொபியூமறி அன் ராதா புறடக்ஸ்"
உரிமையாளர்களால்
தயாரிக்கப்பட்டு எமது ஸ்தாபனத்தின் மூலமாகவும் எமது வான்கள், லொறிகள் மூலமாகவும் மாத்திரம் இலங்கையில் விற்பனை செய்யப்படுகிறது.
பிரசித்திபெற்ற சகல ரோக நிவாரணி
"ராதா மின்சார மருந்து"
இவ் அரிய மருந்தின் அமோகமான விற்பனையைக் கண்டு சிலர் போலி மருந்துகளைத் தயாரித்து அசல் "ராதா மின்சார மருந்து"ப் பெட்டிகள் லேபல்கள் மாதிரி போலிகள் அச்சடித்து விற்பனை செய்து பொதுமக்களையும் வியாபாரிகளையும் ஏமாற்ற முற்பட்டிருக்கிறார்கள் என, எமது கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. சில வருமானம் குறைந்த படம் தயாரிப்பவர்களும், புளக் தயாரிப்பவர்களும், அச்சடிப்பவர்களும் இந்தப் போலித் தயாரிப்பாளர்களுக்கு அனுசரணையாக இருந்து வருகிறார்கள் இவர்கள்மேல் சட்டபூர்வமான நடவடிக்கை எடுக்கப்பட்டு கடுந்தண்டனைக்கு உட்படுத்தப்படுவர்.
பொதுமக்களும் வியாபாரிகளும், எமது ஸ்தாபனத்தின் மூலமாகவும் எமது வியாபார வான்களிலும், லொறிகளிலும் விற்பனையாகும் அசல்
"ராதா மின்சார மருந்து"
TRADE MARK
RADHA PERFUMERY & RADHA PRODUCTS
வாங்கி போலிகளைத் தவிர்க்குமாறு
அன்புடன் வேண்டப்படுகின்றனர்.
எமது பில் இல்லாமல் மின்சாரமருந்து
வைத்திருக்கும் வியாபாரிகளும் மேற்படிகுற்றத்தை
செய்ததாகக் கணிக்கப்படுவர்.
எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி
53, K. K. S. ரோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 541
160, செட்டியார் தெரு, கொழும்பு-11. தொலைபேசி: 35825

மகத்தான தீபாவளி
மலிவு விற்பனை !!!
பிளெயின் நைலெக்ஸ் சேலைகள் ம. வி. 57-50
விற்றுமுடிப்பதற்காக பிறெசியர்ஸ் 40 - 42 சைஸ்மாத்திரம் ம. வி. 1-50
உங்களுக்குத் தேவையானவற்றை தேர்ந்தெடுப்பதற்கு
இன்றே விஜயம் செய்யுங்கள்.
டயரும்ஸ்
54, 60, மெயின்வீதி யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாப்பாடு மகாநாடு!

## லண்டனில் நடக்கும்

லண்டன், அக். 22

எந்த தேசத்தவரும் எந்த் இனத்தவரும் தமக்குப் பிடித்தமான தேசிய உணவுகளை லண்டன்மாநகரிலுள்ள போசனசாலைகளில் பெற்றுக்கொள்ளலாம். இதனை நிரூபிக்கும் வகையில் அடுத்த மாதம் லண்டனில் ஒரு 'சாப்பாடு மகாநாடு' கூட்டப்படுகிறது. 16 நாடுகளைச் சேர்ந்த 50 பத்திரிகையாளர்கள் இதில் பங்குகொள்ள அழைக்கப்பட்டிருக்கிறார்கள். ஒரு வாரம்வரை லண்டனுக்கு அழைக்கப்பட்டிருக்கும் இவர்களுக்கு இங்குள்ள பிரசித்திபெற்றுள்ள ஹோட்டல்களிலும் போசனசாலைகளிலும் பரிமாறப்படும் பலவகையான தேசிய உணவுகளை சுவைத்து ருசிபார்க்கும் அரிய வாய்ப்புக் கிடைக்கும்.

## "விலை மதிப்புள்ள மூலிகைகள் யாழ்ப்பாணத்தில் உள்ளன"

யாழ்ப்பாணம், வெள்ளி

"அடுத்தவருடம் 1971- ஜனவரி மாதம் தொடக்கம் ஆயுள்வேத வைத்தியப் பட்டதாரிகளைத் தெரிவு செய்வதில் ஒழுங்குமுறை கட்டாயமாக நிலைநாட்டப்படும். அரசியல் வாதிகளின் தலையீட்டைத் தவிர்க்கப் பெரும் போராட்டம் நடத்த வேண்டியிருக்கின்றது. பட்டதாரிகள் ஒன்று சேர்ந்து மூலிகைத் தோட்டம் ஒன்றை உருவாக்கும்படி வேண்டுகின்றேன். வட இலங்கையில் குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதியில் விலைமதிப்புள்ள மூலிகைகள் உள்ளன. 'ரேசாவிங்கா' என்ற பட்டிப்பூ மரம் மூலிகைக்கு டென்மார்க், சுவிச்சர்லாந்து, ஜேர்மனிபோன்ற நாடுகளில் ஒருதொன் 120 பவுண்ட்டாக விற்கப்படுகிறது. அதை நாம் ஏற்றுமதியாக்கி வெளிநாட்டுச் செலாவணியைச் சேமிக்கலாம்.'

இவ்வாறு ஆயுள்வேத ஆணையாளர் திரு. விமல்நவகமுவ, டீ. ஏ. எம். எஸ், டீ. ஐ. எம். எஸ். வைத்தியப் பட்டதாரிகளால் புளூறிபன்ஹோட்டலில் அளிக்கப்பட்ட இராப்போசன விருந்து வைபவத்தில் கலந்துகொண்டு பேசுகையில் கூறினார்.

'உள்ளூராட்சி மன்றங்களும் ஆணைக்குழுவும் வைத்தியர்களைத் தெரிவு செய்வதில் பாரபட்சம் காட்டி வருவதாகவும், தற்காலிகமா குறைந்த சம்பளத்தில் ஆயுள்வேத வைத்தியர்களை நியமித்து அவமானப்படுத்துவதாயும் நோயாளர்களை யதார்த்தமாக ஆராய்ச்சி செய்வதற்கு வேண்டிய வைத்தியசாலைகளை ஏற்படுத்தி மேல்நாட்டு வைத்திய நிபுணர்களின் சினேகபூர்வமான ஒத்துழைப்பையும் பெறவேண்டும் என்றும் விழாவில் பேசிய டாக்டர் க. மருதையினுர் கேட்டுக் கொண்டார்

யாழ், பெரியாஸ்பத்திரியைச் சேர்ந்த டாக்டர் அன்ரன் ஜெயசூரியா பேசுகையில் கூறியதாவது-

பல்லாண்டு காலமாக ஆயுள்வேத வைத்தியர்களை இந்தநாட்டின் இரண்டாந்தரப் பிரஜைகளாக வேமேனுட்டு வைத்தியர்கள் கணித்து வந்துள்ளனர். எனவே சுகாதார மந்திரி இரண்டு பகுதியினரையும் சமமாக நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயகா இதற்கான அத்திபாரத்தை இட்டுச் சென்றுள்ளார்.

இன்றைய நமது பிரச்னை சமூக, பொருளாதாரமே தவிர வேறொன்றுமில்லை. நாட்டின் ஜனத்தொகை அதிகரிப்பால் இது ஏற்படுகிறது இதைத் தவிர்க்க குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை ஆயுள்வேத இலாகாவும் அமுல் நடத்த வேண்டும்.' (கு. வி. ம.)

## கால் நடை ஆராய்ச்சி!

கொழும்பு, வியா

காலநடைகளின் கால், வாய் நோய்கள்பற்றியும், நில அட்டை பற்றியும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுவதற்கு அமெரிக்க அரசாங்க விவசாய இலாகா இரண்டு மானியங்களை இல... சியை மேற்கொள்ளுவதுடன் இதனைக் கட்டுப்படுத்தக்கூடிய தடுப்பு ஊசி மருந்துகளை உற்பத்தி செய்யும் சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்து அறிவர்-

தற்பொழுது வழங்கப்பட்டுள்ள 2,39,700 ரூபா ...

### மேற்காஸியா சம்பந்தமாக 1967-ல் நிறைவேற்றப்பட்ட

# பாதுகாப்புசபைத் தீர்மானத்தை முழுமையாக செயல்படுத்த வேண்டும்

## வெளிநாட்டமைச்சர்கள் கூட்டத்தில் வலியுறுத்து

நியூயோர்க், அக் 22

மேற்காசியாவில் அமைதி ஏற்படுவதற்கு 1967-ம் ஆண்டு ஐ நா பாதுகாப்புச் சபை நிறைவேற்றிய தீர்மானம் முழு அளவில் செயல்படுத்தப்பட வேண்டும் என்று பாதுகாப்பு சபையின் விசேஷ கூட்டமொன்றில் ஒப்புக்கொள்ளப்பட்டது.

வெளி நாட்டமைச்சர்கள் மட்டத்தில் பாதுகாப்பு சபையின் இரகசியக்கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது இந்தக்கூட்டத்தில்தான் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

ஐ. நா. வின் 25 வது வெள்ளிவிழாவை யொட்டி இந்தக்கூட்டம் நடைபெற்றது, வெள்ளிவிழாவுக்காக வந்துள்ள அங்கத்துவ நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

1967-ம் ஆண்டு பாதுகாப்புச் சபை மேற்காசிய அமைதி குறித்து நிறைவேற்றிய தீர்மானம்முழுமையாக அமுல் நடத்தப்பட வேண்டும் என்று கூட்டத்தில் ஒப்புக் கொள்ளப் பட்டதுடன் நீதியும், நீடித்ததுமான அமைதியேற்படுவதற்கு எல்லாநாடுகளும் ஒத்துழைப்பு நல்கவேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப் பட்டது என்று கூட்டத்தின் பின்னர் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

1967-ம் ஆண்டு அரபு நாடுகளுக்கும் இஸ்ரேலுக்குமிடையில் ஏற்பட்ட ஆறுநாள் கடும் சண்டையைத் தொடர்ந்து பாதுகாப்பு சபையில் மேற்குறித்த தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இஸ்ரேலியர் கைப்பற்றிய அரபுப் பிரதேசங்கள் எல்லாவற்றிலிருந்தும் வெளியேறவேண்டும், மேற்காசியாவிலுள்ள சகல நாடுகளதும் சுயாதிபத்தியம் அங்கீகரிக்கப்படவேண்டும் என்று பாதுகாப்பு சபையில் அந்தத் தீர்மானம் வலியுறுத்துகின்றது.

## 'ஜாரிங் முயற்சிகளைத் துரிதப்படுத்தவேண்டும்'

— குரோமிக்கோவ்

மேற்காசிய அமைதிக்கான ஐ நா விசேஷ தூதுவரின் முயற்சிகள மீண்டும் துரிதப்படுத்தப்பட வேண்டும் என்று சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு குரோமிக்கோவ் வலியுறுத்தினுர்.

ஐ நா பொதுச்சபையில் உரை நிகழ்த்திய திரு. குரோமிக்கோவ், மேற்காசியாவில் அமைதியேற்படுவதற்கு இஸ்ரேலியர் கைப்பற்றியுள்ள இடங்களிலிருந்து வெளியேறிச் செல்ல வேண்டியது மிகவும் அவசியம் என்று வலியுறுத்தினுர்.

எகிப்தியர் போர் ஒய்வு ஏற்பாடுகளை மீறிவருகிறுர்கள் என்பது வேண்டுமென்ற திரித்துக் கூறுவதாகும் என்றுசொன்ன அவர் தங்களின் நடவடிக்கைகளை மூடிமறைப்பதற்காகவேஇப்படிக் கூறுகிறுர்கள் என்றும் குறிப்பிட்டார்,

## 'போர் ஒய்வை நீடிக்கத் தயார்'

## பரிசு பெற்றனர்

உருத்திரபுரம், வியா

உருத்திரபுரம், மகாவித்தியாலயத்தில் கலைவாணி விழாவையொட்டி மாணவரிடையே நடத்தப்பட்ட கட்டுரை சொற்பொழிவு மனனப்போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில்கள்வழங்கப்பட்டன. பரிசில் பெற்ற மாணவர்களின் விபரம்வருமாறு:-

மனனம்:- ந நித்தியானந்தன், ஞ. ஜெகதீஸ்வரன், இ. இரேவதி, க. கலாநிதி, ப. தேவரஞ்சிதா, கி. ஜெயராசி, ம. இரதி இராணி. த. கமலாதேவி, கு. பாலலட்சுமி, சி ஞானசக்தி, சு. செல்வயோகம், இ. நித்தியானந்தன்.

கட்டுரை: நா. இலட்சுமி, காந்தன். அ. ஜெயராசா, கா. இராசபூபதி. இ. நித்தியானந்தன், ந. ஞானசவுந்தரி, க. சிவகுமாரன்.

சொற்பொழிவு:- க. ஜெகதாம்பாள், நா. லதா, செ. சந்திரமலர், ம இரதிராணி, அ. இராசேஸ்வரி, வை. இராசேஸ்வரி, ச தனலட்சுமி, ந. ஞானசவுந்தரி, த. சண்முகம்.

## சிறுவர்தினக் கொண்டாட்டம்

ஏருவூர், வியா

மட்டக்களப்பு பொது நூல் நிலையத்தில் சிறுவர்களுக்கான புத்தக கண்காட்சி மட்டுநகர் மாநகர சபை முதல்வர் திரு. எஸ். திசவீரசிங்கத்தினுல் திறந்து வைக்கப்பட்டது. பாடசாலை சிறுவர்களுக்கான அணிவகுப்பு மட்டக்களப்பு வின் சென்ட் மகளிர் கல்லூரியில் மேல் நாட்டு வாத்தியஇசையுடன் இடம் பெற்றது.

உதவி ஆணையாளர் பாதுகாப்பு சிறுவர் நலன் சேவை ...

### சிங்கப்பூர் நிருபர்களுடன்

# எம்.ஜி.ஆர். தகராறு?

சிங்கப்பூர், அக், 22

பிரபல தமிழ் சினிமா நடிகரும் திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளரும் எம். எல். ஏ. யுமான திரு எம். ஜி. ராமச்சந்திரன் பத்திரிகை நிருபர்களிடம் அகம்பாவமாக நடந்து கொண்டார் என்று சிங்கப்பூர் பத்திரிகையாளர் சங்கம் கண்டித்திருக்கிறது.

ஒரு பத்திரிகை நிருபரையும் புகைப்படப்பிடிப்பாளரைும் மரியாதைக் குறைவாக நடத்தியதாக அவர் மீது இந்தச் சங்கம் குற்றஞ்சாட்டியிருப்பதுடன் இந்தச் சம்பவம் குறித்து வன்மையான கருத்துக் கொண்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளது.

வெளி நாடுகளில் உலகம் சுற்றும் வாலிபன் என்ற திரைப்படத்தை எம், ஜி. ஆர். இப்பொழுது தயாரித்து வருவது தெரிந்ததே. அவர் சமீபத்தில் ஜப்பான் சென்று அங்கு பல காட்சிகளைத் தமது படத்துக்காக எடுத்துள்ளார், எம். ஜி, ஆரின் சிங்கப்பூர் வருகை குறித்து இங்குள்ள பத்திரிகைகள் பிரமாதமான செய்திகளை வெளியிட்டு வந்தன.

பத்திரிகை நிருபர்களுடன் ஏற்பட்ட இந்தநிகழ்ச்சி துரதிருஷ்டமானது என்று ஒருவர் கூறினர்.

## நோபல் பரிசு பெறும் விவசாய விஞ்ஞானி

பொன், அக்டோபர் 22

1970-ம் ஆண்டுக்கான நோபல் சமாதனப் பரிசு அமெரிக்க விவசாயத்துறை விஞ்ஞானி நோர்மன் ஏர்னஸ்ட் போர்லாக் என்பவருக்கு கிடைத்துள்ளது

வளரும் நாடுகளில் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காக இவர் பொதுப்பணி ஆற்றியிருக்கிறுர்.

இந்தியா, பாகிஸ்தான், மெக்ஸிக்கோ ஆகிய நாடுகளில்இவர் கண்டுபிடித்த வீரியரக கோதுமை மிகப்பெரிய அளவு மகசூலை அளித்துள்ளது.

56 வயதான இவர் இப்பொழுது மெக்ஸிக்கோவில் ஆராய்ச்சிகள் செய்துவருகின்றுர்.

86 லட்சம் டாலர் மதிப்புள்ள இந்தப்பரிசைப் பெறும் விஞ்ஞானியான இவர் நோர்வேஜிய இனத்தைச் சேர்ந்தவர்.



## புதிய சமாதான நீதவான்

யாழ்ப்பாணம், வெள்ளி

இணுவிலைச் சேர்ந்த திரு. எஸ். கே. துரைசிங்கம் யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் திரு. எவ். டயஸ்முன்னிலையில் சமாதானநீதவாகை சத்தியப்பிரமாணம் எடுத்து கொண்டார். இவர் தமது சத்தியப்பிரமாணத்தை தமிழில் செய்தார். அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை உபதலைவரான இவர் பொதுநல ஊழியராகவும், சமூகத்தொண்டனுகவும் இருந்து சேவையாற்றி வருகிறுர். இணுவில் நியூலங்கா பாம் உரிமையாளரான இவரின் தோட்டத்திற்கு பிரதமராக இருந்த திரு. டட்லி சேனநாயக்கா உட்படப் பல தலைவர்கள் விஜயம் செய்து பாராட்டுத் தெரிவித்துள்ளார்கள். சமீபத்தில் வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமன் விஜயம் செய்தார். திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக பதவி ஏற்றதும், ரோஜாக்களாலான மலர்ச் செண்டை நேரில் அவரிடம் இவர் அன்பளித்தார்.

— —

ஊரதீவு, வியாழன்

ஊரதீவு கிராமமுன்னேற்றச்சங்கம் சனசமூக நிலையம் ஆகியன பல வருடங்களாக பூட்டப்பட்டு இருக்கின்றனவாம். இது பற்றி இப்பகுதி மக்களிடையே பெரும் அதிப்தி நிலவுகிறது.

# தென் ஆபிரிக்கா வுக்குபிரான்ஸ் ஆயுதம் விற்காது

## சாம்பியா அதிபர் முயற்சி வெற்றி

பாரீஸ், அக் 22

தென்னுபிரிக்காவுக்கு ஆயுதம் விற்பதற்கு பிரான்ஸ் முடிவு செய்துள்ளது.

தென்னுபிரிக்காவுக்கு ஆயுதம் விற்கவேண்டாம் என ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாய் நோய்கள்பற்றியும், நில அட்டை பற்றியும் ஆராய்ச்சிகள் மேற்கொள்ளுவதற்கு அமெரிக்க அரசாங்க விவசாய இலாகா இரண்டு மானியங்களை இலங்கைக்கு வழங்கியுள்ளது. அமெரிக்க பொதுச் சட்டம் 480-ன் கீழ் இந்த மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

பேராதனையில் உள்ள கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் கால்நடைகளின் கால், வாய் நோய்பற்றி மூன்றுண்டுகால ஆராய்ச் தக்கூடிய தடுப்பு ஊசி மருந்துகளை உற்பத்தி செய்யும் சாத்தியக் கூறுகளையும் ஆராய்ந்து அறிவர்.

தற்பொழுது வழங்கப்பட்டுள்ள 2,39,700 ரூபா மானியத்தைக் கொண்டு இலங்கை விஞ்ஞானிகள் வெளிப்புற ஆராய்ச்சிகளை மேற்கொள்வர். அத்துடன் நில அட்டைகளின் பெருக்கத்தை எந்த முறையில் கட்டுப்படுத்தலாம் என்பது பற்றியும் கால்நடை ஆராய்ச்சி நிறுவனத்தில் மிருக வைத்தியர்கள் ஆராய்ச்சிகளை மேற்கொள்வர்.

## கி. ச. தேவைகள் பற்றிய மகஜர் சமர்ப்பிக்க முடிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

"உள்ளூராட்சி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா யாழ்ப்பாணம் வரும்போது, கிராமசபைகளின் தேவைகள் பற்றி ஒரு மகஜர் சமர்ப்பிக்க வேண்டும்" என யாழ். மாவட்டக் கிராமசபைத் தலைவர்களின் கமிட்டிக்கூட்டம் உதவி உள்ளூராட்சி ஆணையாளர் காரியாலயத்தில் நேற்று நடந்த போது தீர்மானிக்கப்பட்டது.

திரு. வி. பொன்னம்பலம் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திருவாளர்கள் சி. மார்க்கண்டு, எஸ். சடாட்சரம், வி. துரையப்பா, கே. சதாசிவம் ஆகியோர் கலந்து கொண்டனர். உதவி உள்ளூராட்சி ஆணையாளர் கூட்டும் மாநாடு முடிந்தபின் அமைப்பு விதிகளை ஆராய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

## தொடர்ந்து மழை
### விவசாயிகள் கஷ்டம்

கிளிநொச்சி, வியா

கடந்த சில வாரங்களாகப் பெய்துவரும் மழை காரணமாக இப்பகுதியில் பெரும்போகச் செய்கைக்காக விதைக்கப்பட்ட நெற்பயிர்கள் நாசமடைந்துள்ளன. தொடர்ந்து மழை பெய்வதாலும் மழைநீர் தேங்கி நிற்பதாலும் விதைப்புவேலைகளைக்கூட மேற்கொள்ள முடியாமல் விவசாயிகள் அவஸ்தைப்படுகிறார்கள்.

கிளிநொச்சிப் பகுதியில் சுமார் 4,600 ஏக்கர் இதுவரை விதைக்கப்படவில்லையாம். இப்பகுதிகளிலுள்ள நீர்நிலைகள், வாய்க்கால்கள் எங்கும் வெள்ளம் நிறைந்திருக்கின்றது. இரணைமடுக் குளத்தின் நீர்மட்டமும் உயர்ந்துள்ளது.

பல்கலைக்கழகங்கள்

## நவம்பர் 1-ந் திகதி ஆரம்பம்

கோட்டை, வியா

நாட்டிலுள்ள சகல பல்கலைக்கழகங்களும் நவம்பர் மாதம் 1-ந் திகதி ஆரம்பமாகிறது. விரிவுரைகள் நவம்பர் 15-ம் தேதி ஆரம்பிக்கப்படும்.

மாணவர் அனுமதியில் ஏற்பட்ட பிரச்னைகளில்கால வரையறையின்றி மூடப்பட்ட பல்கலைக்கழகங்களை நவம்பர் முதலாம் திகதி ஆரம்பிக்குமாறு கல்வி அமைச்சர் தேசிய உயர்கல்விச்சபைத் தலைவருக்கு அறிவித்துள்ளார்.

### கண்டனம்

மாவிட்டபுரம், வியா

பட்டதாரி ஆசிரியர் நியமனத்தில் சிங்கள பட்டதாரிகளுக்கு 15-ந் திகதி நியமனம் வழங்கித் தமிழ்ப்பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்காததுதான் மக்கள் அரசின் நீதியானசெயல் என்று மக்கள் அரசைக் கேட்கும் தீர்மானம் ஒன்றை வேலையற்ற பட்டதாரிகள் சங்க கோப்பாய்க்கிளை நிறைவேற்றியுள்ளது.

வேலையற்ற பட்டதாரிகள் சங்க கோப்பாய்க் கிளையின் நிர்வாகசபைக் கூட்டம் கோப்பாயில் திரு. கே. சதானந்தன் தலைமையில் நடைபெற்றது.

மிகவிரைவில்விகிதாசாரப்படி 500 தமிழ் பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்க வேண்டும். அதில் 300 தமிழருக்கும் 200 முஸ்லிம்களுக்கும் வழங்கவேண்டும் என அரசைக் கோருவதென்ற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

## 'போர் ஓய்வை நீடிக்கத் தயார்'
### — திருமதி மெயர்

இஸ்ரேல் பிரதம மந்திரி திருமதி கோல்டாமெயரும் பொதுச்சபையில் உரை நிகழ்த்தினர். காலவரையறையின்றி போர் ஓய்வை நீடிப்பதற்கு இஸ்ரேல் தயாராய் இருக்கின்றதுஎன்று திருமதி மெயர் கூறினர். அரபு நாடுகளுடன் நேரடியாகப் பேச்சுக்களை ஆரம்பிக்கவும் இஸ்ரேல் தயாராய் இருக்கின்றது ஆனால் எகிப்தியரின் போர் ஓய்வு மீறல்கள் திருத்தப்படாத வரைக்கும் ஜாரிங் அமைதிப் பேச்சுக்களில் கலந்துகொள்ளப் போவதில்லைஎன்றார் திருமதி மெயர்.

திருமதி மெயர் இன்று அமெரிக்க வெளிநாட்டமைச்சர் திரு. வில்லியம் ரோஜர்ஸைச் சந்திக்கவிருந்தார்

## தமிழ் கற்க விரும்பும்
### பிரிட்டிஷ் பேராசிரியை

லண்டன், அக். 22

இங்கிலாந்திலுள்ள எடின்பேர்க் சர்வகலாசாலையின் மொழித்துறை பேராசிரியையான திருமதி எலிசபெத் உல்டால் தமிழ்மொழி கற்கும் நோக்குடன் தமிழ் நாட்டிலுள்ள அண்ணாமலை சர்வகலாசாலைக்கு செல்லவிருக்கிறார். தமிழ்மொழி பற்றியும் தமிழ்க்கலாசாரம் பற்றியும் கற்கும் அதே வேளை மொழி ஒலிப்புமுறை பற்றி அண்ணாமலை சர்வகலாசாலையில் அவர் விரிவுரைகளை நிகழ்த்தி வருவார்.

எடின்பேர்க் சர்வகலாசாலையில் 21 வருடங்களாக பேராசிரியையாக கடமையாற்றிவரும் அவர் அடுத்த மாதம் 8-ந் திகதி அண்ணாமலை நகர்செல்லவிருக்கிறார். பிரிட்டிஷ் கவுன்சில் இவரது இந்தக்கல்வி விஜயத்தை ஒழுங்கு செய்திருக்கிறது.

திருமதி உல்டால், ஸ்பானிய, ஜெர்மானிய, பிரஞ்சு, டானிஷ் மொழிகளில் பாண்டித்தியம் பெற்றவர் தமிழ் மொழியின் வளம் பற்றிக் கேள்வியுற்ற அவர் தமிழ் மொழிபற்றியும், தமிழ்ப் பண்பாடு பற்றியும் படித்தறிய தாம் ஆவல்கொண்டிருப்பதாகத் தெரிவித்தார். தமிழின் ஒலிப்பு முறைபற்றி தாம் ஏற்கனவே சிறிது அறிந்திருப்பதாகவும் அவர் கூறினர்.

எடின்பேர்க் சர்வகலாசாலையைச் சேர்ந்தவிரிவுரையாளர்கள் இருவர் ஏற்கனவே அண்ணாமலை சர்வகலாசாலையில் தமிழ்மொழி பயிலச் சென்றிருக்கிறார்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

## ஜனத்தொகை இரட்டிப்பாகும்

நியுயோர்க், அக். 22

2006-ம் ஆண்டில் உலக ஜனத்தொகை இரண்டு மடங்காகிவிடும்.

இத்தகவல் ஐ. நா. அறிக்கையொன்றில் காணப்படுகின்றது

சீனாவின் ஜனத்தொகை 74 கோடி, பாரதத்தின் ஜனத்தொகை 53 கோடி 70 லட்சம், சோவியத்நாடு 24 கோடி.

### ஆலயத்தில் ஒலிபெருக்கி களவு

மாவிட்டபுரம், வியா

கட்டுவன் வீரபத்திரர் ஆலயத்தில் நடந்த ஒரு விழாமுடிவில் ஆலயத்துள் பாதுகாப்புக்காக வைக்கப்பட்டிருந்த ஒலிபெருக்கிக் கருவியொன்றைச் சிலர் ஓட்டைப் பிரித்து ஆலயத்துள் இறங்கி களவாடிச் சென்றுவிட்டனர். 1000 ரூபா பெறுமதியான ஒலிபெருக்கிப் பொருட்கள் களவாடப்பட்டுவிட்டதாக காங்கேசன்துறைப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது

இதுகுறித்து சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

### நெடுந்தீவில் மரநாட்டுவிழா

நெடுந்தீவு, வியாழன்

நெடுந்தீவில் விவசாயப் பகுதியினர் மரநாட்டு விழாவை நடாத்தினார்கள் 15 பேர் கொண்ட விவசாய கோஷ்டியினர் நெடுந்தீவுக்கு விஜயம்செய்து இவ்விழாவில் கலந்துகொண்டு நடாத்தினர்கள். இருநாட்களாக நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் முதலாம் நாளான 12ம் திகதி நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது விவசாயப் போதனாசிரியர்கள் பலர் பேசினர்கள்.

சிறுவர்களுக்கான அணிவகுப்பு மட்டக்களப்புவின் செண்ட் மகளிர் கல்லூரியில் மேல் நாட்டு வாத்தியஇசையுடன் இடம் பெற்றது.

உதவி ஆணையாளர் பாதுகாப்பு சிறுவர் நலன் சேவை உதவி ஆணையாயர் திரு. சி. எக்ஸ்பெக்மன் மட்டக்களப்புமுதலாவதுஎம். பி. திரு செ. இராஜதுரை திரு. பி. இராமலிங்கம் இளைப்பாறிய தலைமையாசிரியர் திரு. ஏ. பி. குலசிங்கா ஆகியோர் உட்பட பலர் உரைநிகழ்த்தினர். மத்தியமகாவித்தியாலயத்தில் மட்டக்களப்பு அரசாங்க அதிபர் தலைமையில் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

இதில் மட்டக்களப்பு வின்சன் கல்லூரி சிங்கள மகாவித்தியாலயம், சிவானந்த வித்தியாலயம் செண் மைக்கல் கல்லூரி பங்குபற்றின.

## ஆயுதம் விற்காது
### சாம்பியா அதிபர் முயற்சி வெற்றி

பாரிஸ், அக் 22

தென்னாபிரிக்காவுக்கு ஆயுதம் அனுப்புவதை நிறுத்துவதற்கு பிரான்ஸ் முடிவு செய்துள்ளது.

உள்நாட்டுக் கலகங்களுக்கெதிராகப் பாவிக்கக் கூடிய ஆயுதங்கள் எதையும் தென்னாபிரிக்காவுக்கு அனுப்புவதை நிறுத்திவிட பிரான்ஸ் முடிவுசெய்துள்ளது. ஆயுதங்கள் விற்பனை செய்வதற்கான புதிய ஒப்பந்தம் எதையும் செய்துகொள்வதில்லை என்றும் பிரான்ஸ் தீர்மானித்திருக்கிறது.

தென்னாபிரிக்காவுக்கு ஆயுதம் விற்கவேண்டாம் என ஐரோப்பிய நாடுகளை வற்புறுத்துவதற்காக சாம்பியா அதிபர் கென்னத் கவுண்டா தலைமையில் விஜயம் செய்துள்ள ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமை ஸ்தாபனத் தூதுகுழுவின் முயற்சியினால் இந்தப் பயன் ஏற்பட்டுள்ளது. சாம்பியா அதிபர் கென்னத் கவுண்டா பிரஞ்சு அதிபர் பொம்பிடோவுடன் நடத்திய பேச்சு வார்த்தைகளின் பின்னர் பிரான்ஸ் இந்த முடிவை அறிவித்தது.

தமது முயற்சிகளுக்கு மாபெரும் வெற்றியாகும் என்று அதிபர் கவுண்டா பின்னர் கூறினார்.

## சுவீகரிக்கும்படி உத்தரவு

யாழ்ப்பாணம், வியாழன்

துன்னாலை தெற்கு ஆட்டுப்பட்டி நிலத்தை இம்மாதம் 30 திகதி அரசாங்கம் பொறுப்பேற்கவிருக்கிறது.

இதுசம்பந்தமான அறிவித்தல் ஒன்றை வடமாகாண அரசாங்க அதிபர் திரு. விமல் அபயசேகரா, வடமராட்சிக் காரியாதிகாரிக்கு அனுப்பி வைத்துள்ளதாக துன்னாலை தெற்கு தயாநிதி கி. மு. சங்க செயலாளர் திரு. எஸ். செல்லையா தெரிவித்துள்ளார்.

65 பரப்புக் கொண்ட ஆட்டுப்பட்டி என்ற நிலம் சுவீகரிக்கப்பட்டு துன்னாலையில் குடி இருப்பதற்கு நிலமின்றியிருக்கும் சிறுபான்மைத் தமிழ் மக்களுக்கு வழங்கப்படவுள்ளது. இதுபற்றி முன்னர்குடியிருப்பதற்கு வசதி செய்யும் நோக்கமாக துன்னாலை தெற்கு தயாநிதி கிராம முன்னேற்றச்சங்கச் செயலாளர் திரு. எஸ். செல்லையா, சி. பா. தி. மகாசபைத் தலைவர் திரு. எம். சி. சுப்பிரமணியம் எம். பி. ஆகியோர் முன்னைய பிரதமர் திரு. டட்லி சேனநாயக்காவைப் பேட்டிகண்டிருந்தனர். இது சம்பந்தமாகவும் யாழ். கச்சேரி அலுவலகம் முன்றலில் உண்ணாவிரதமும் மேற்கொண்டிருந்தனர். இவர்களின் அயராத முயற்சியின் பயனாக இவ் ஆட்டுப்பட்டி நிலத்தை அரசாங்கம் இம்மாதம் 30-ம் திகதி சுவீகரிக்கும்படி உத்தரவு பிறப்பித்துள்ளது.

(கு. வி. ம.)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

பிறர் இழைத்த தீங்கை வெட்டெனமற, அவர்கள்மாட்டு வெகுளாது அவர்களை மன்னித்துவிடு. உன்னை வெறுப்பவனுக்கு நன்மையே செய்.

— சுவாமி சிவானந்தா.

ஈழநாடு

Eelanadu National Tamil Daily

Telegram: "EELANADU" Jaffna.

Post Box: 49, Jaffna. Telephone: 689.

சாதாரண வருஷம் ஐப்பசி மாதம் 6-ந் திகதி (23 - 10 - 70)

## தோட்டத்தொழிலாளர்

குடியுரிமைப் பிரச்னையும் பொருளாதாரத் தாழ்வுமே தோட்டத் தொழிலாளர்கள் உரிமையுடன் நாட்டு வளர்ச்சியில் பங்குகொள்ள முடியாமல் தடையாக நிற்கின்றனவென்றும் பெரும்பான்மைமக்களுடனுன நட்புறவுக்கும் தேசிய உணர்வுக்கும் இந்தத் தடை முட்டுக்கட்டையாக இருக்கிறதென்றும் தொழிலாளர் தேசிய சங்கத்தின் புதிய தலைவர் திரு ஐயாத்துரை அட்டனில் நடைபெற்ற ஐந்தாவது மகாநாட்டில் கூறியிருப்பது அர்த்த புஷ்டியுள்ள அரசாங்கமும் அரசியல் தலைவர்களும் இந் நாட்டின் நலனில் அக்கறையுள்ளவர்களும் தலைவர்களும் சிந்தனைக்கெடுத்துக் கொள்ள வேண்டிய விஷயமாகும்.

இந்திய வம்சாவளியினரான தோட்டத் தொழிலாளர்கள் இந்த நாட்டின் பொருளாதார வளத்துக்காகப் பாடுபட்டவர்களென்றும் பாடுபட்டு வருகின்றவர்களும் மேடைகளில் பேசப்பட்டு வருகிறது.

இத் தொழிலாளர்களின் நலனைப் பேணவும் உரிமைகளைப் பாதுகாக்கவும் என்று தொழிற்சங்கங்கள் பலவிருக்கின்றன ஆனால் இந்நாட்டிற்குப் பெருமளவு வருமானத்தைத் தேடித் தரும் தோட்டத் தொழிலாளரின் வாழ்வு வளம் பெறுவதற்கான வழியையே காண முடியவில்லை, குடியுரிமை வாக்குரிமைபறிக்கப்பட்ட இத் தொழிலாளர்கள் வேலை பெறும் உரிமை நிலம் வாங்கும் உரிமை மற்றும் மனித உரிமைகள் பலவற்றையும் படிப்படியாக இழந்துவருகின்றனர்,

நாடற்றவர்கள் என்றநிலை சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை அமுல் செய்வதன் மூலம் முற்றாக நீங்கிவிடும் என்ற நம்பிக்கையும் கூட தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் நீங்கி வருகிறது,

வம்சாவழிப் பிரஜை, பதிவுப் பிரஜை, விசேஷபிரஜை

பிரஜாவுரிமைச் சட்டங்கள் தோட்டத் தொழிலாள மக்களை மட்டுமல்ல இந் நாட்டு மக்களையும் அரசாங்க அதிகாரிகளையும் மொத்தத்தில் நாட்டு மக்களையும் நாட்டை ஆளும் அரசாங்கத்தையுமே குழப்பத்தில் ஆழ்த்துகிறது, பிரஜாவுரிமைச் சட்டங்கள் அனைத்தையும் மறுபரிசிலனை செய்து சகல அம்சங்களையும் அடக்கிய ஒரே சட்டம் இயற்ற வேண்டியது அவசியம்.

இலங்கைப் பிரஜைகளான பின்னரும் இதர பிரஜைகளுக்குள்ள உரிமைகள் மறுக்கப்படுவதும் அவர்களை அந்நியராகவே கருதுவதும் அவர்களுக்குமட்டுமல்ல நாட்டுக்கும் எவ்வகையிலும் நன்மையளிக்க மாட்டாது,

தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளின் கட்டுப்பாடுகளின்கீழ் இருப்பதும் ஒரு தொழிலுக்கு ஒருசங்கம் என்றில்லாமல் ஒரு தொழிலுக்குப் பல சங்கங்களிருப்பதும் குறிப்பாகத் தோட்டத்தொழிலாளர் மத்தியிலும்போட்டித் தொழிற்சங்கங்களிருப்பதும் அவர்களுடைய இன்றைய அவலநிலைக்கு முக்கியகாரணமென்று சொல்லலாம்,

இந்த நிலை மாறி தோட்டத் தொழிலாளர் ஒரே தொழிற் சங்கத்தின்கீழ் ஒன்றுபடவும் அரசியல் கட்சிகளின் கட்டுப்பாடுகளிலிருந்துவிடுபட்டுத் தனித்தியங்கவும் வழிபிறந்தால் அவர்கள்நிலை மேம்பட முடியும்.

ஆனாலும் இன்றைய நிலையில் நாட்டின் பொருளாதாரத்தை விருத்தி செய்து பொருளாதாரச் சுதந்திரத்துக்கு வழிவகுக்க வேண்டிய இச் சமயத்தில் உழைப்பாளிகளான தோட்டத் தொழிலாள மக்களை ஒதுக்கிவைத்து அவர்களின் சக்தியை வீணாக்குவது விவேகமாகாது,

பிரஜாவுரிமைச் சட்டங்களை மாற்றியோ இதரசட்டங்களைத் திருத்தியோ இலங்கைப் பிரஜைகளானஇந்தியவம்சாவழியினரையும் இந்தநாட்டு மக்களாக ஏற்று அவர்களும் இதர மக்களுடன் சேர்ந்து

# மந்திரிகளிடம் மாணவர் கேள்வி கேட்கும் காலம்

( நமது சிறப்பு நிருபர் )

"இந்த நாட்டில் வாழும் மக்கள் சிங்களம் தமிழ் ஆகிய இரு மொழிகளையும் தெரிந்திருக்க வேண்டுமென்று விரும்புபவன்நான். இருமொழிகளையும்இந்நாட்டு மக்கள் அறிந்திருக்கவேண்டுமென்பதை உணர்த்துவதற்காக, உதவிக் கல்வி அமைச்சருக்கு ஒரு தண்டனையாக நான் முதலில் தமிழ் பேசப் போகிறேன். அதன்பின்னர் எனது பேச்சின் சாரம்சத்தை உதவி அமைச்சர் விளங்கிக் கொள்வதற்காக ஆங்கிலத்தில் சொல்லவிரும்புகிறேன்" என்ற பீடிகையுடன் திரு. ஹன்டி பேரின்பநாயகம் பேச்சை ஆரம்பித்தபோது வேம்படி மகளிர் கல்லூரியில் 'மேபல் தம்பையா' மண்டபத்தில் குழுமியிருந்த ஆசிரியர் இருவர் இப்படித்தான் இவர் சமஅந்தஸ்துப் பிரச்னையைக் கிண்டிவிட்டு சேர். ஜோன் கொத்தலாவலையை அரசியலிலிருந்து அகற்றியதுமல்லாமல் "நாடாறு மாதம் காடாறுமாதம்" என்பதுபோல் இலங்கையிலும் இங்கிலாந்திலுமாகஇருக்கவைத்திருக்கிருர்" என்று பேசிக்கொண்டது என் காதில் விழுந்தது

ஆனல் உதவிக் கல்வி அமைச்சர் துடாவை சேர். ஜோன் மாதிரி வாக்குறுதியைதையும் அளித்து மாட்டிக் கொள்ளாமல் ஹன்டி கொடுத்த கணையை நாசூக்காக அவருக்கே திருப்பி விட்டது ரசமாக இருந்தது.

அகில இலங்கை ஆசிரிய சங்கம், தேசிய ஆசிரியர் சங்கம், வட மாகாண ஆசிரியர் சங்கம் ஆகிய ஆசிரிய சங்கங்களின் பொன்விழா நேற்று முன்தினம் முற்பகல் வட மாகாண ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. க. மகாலிங்கசிவத்தின் தலைமையில் புதிதாகக் கட்டப்பட்டு இந்த மாதம் 7-ம் திகதி தான் திறந்து வைக்கப்பட்ட 'மேபல்தம்பையா' மண்டபத்தில் நடைபெற்றபோது தான் இந்த ரசமான சம்பவமும் இடம் பெற்றது.

ஆசிரிய சங்கங்களின் [illegible]லை[illegible]த்தனது பேச்சை ஆரம்பித்த திரு. ஹன்டி பேரின்பநாயகம் தான் நீடித்த பிரசங்கம் செய்வதை நிறுத்திக் கொண்டு விட்டதாகவும் அதற்குத் தமது உடல்நிலை இடம் தராதென்றும் சொன்னார். ஆசிரிய சேவையிலிருந்து ஓய்வு பெற்று விட்டாலும் தன்னை இப்போதும் ஓர் ஆசிரியராகவே கருதுவதாகவும் கூட்டுறவுக் கலாசாலையில் வாரம் ஒரு தடவை போய் சிறிது நேரம் பேசிவிட்டு, வருவதால் அப்படிக் கருதுவதற்குத் தமக்கு உரிமை இருக்கிறதென்றும் அவர் விளக்கமும் கூறினர். ஆசிரியர்கள் மிக விழிப்புடனிருக்க வேண்டிய காலம் இது என்று எச்சரிக்கை செய்த திரு. ஹன்டி, பிள்ளைகளிடம் ஆசிரியர்கள் கேள்வி கேட்கும் காலமல்லவென்றும் ஆசிரியர்களிடம் பிள்ளைகள் கேள்வி கேட்கத் தொடங்கி விட்டார்களென்றும் கூறிய அவர் ஆசிரியர்களை மட்டுமல்ல திரு. துடாவை போன்ற உதவி மந்திரிகள், மந்திரிகள், பிரதம மந்திரியையும் பிள்ளைகள் கேள்வி கேட்கத் தொடங்கி விட்டார்கள் என்றும் சொன்னார். 'இலவசக் கல்வி அளித்ததுடன் உங்கள் பொறுப்பு முடிந்ததோ, எங்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டுவது உங்கள் பொறுப்பில்லையோ?" என்று பிள்ளைகள் கேட்கத் தொடங்கி விட்டார்கள் என்று எடுத்துக் கூறினார். எங்கள் நாட்டில் இந்தக் கேள்விகளுடன் எங்கள் பிள்ளைகள் நிற்கிறார்கள். அமெரிக்கா, இங்கிலாந்து போன்ற நாடுகளில் பிள்ளைகள் பெரிய கேள்விகள் கேட்கிறார்கள் என்று குறிப்பிட்ட திரு. ஹன்டி ஆசிரிய நியமனங்களில் தங்களையும் கலந்தாலோசனை செய்ய வேண்டுமென்றும் தங்களுக்கு என்ன தேவையென்பதைத் தங்களிடம் கேட்டுத் தங்கள் விருப்பப்படியே பாடத் திட்டம் வகுக்கப்பட வேண்டுமென்றும் அந்தப் பிள்ளைகள் கேட்கிறார்கள் என்றார்.

ஆசிரியர்களை இடமாற்[illegible]

ஆசிரியர்கள் மத்தியில் தொழில் அடிப்படையிலும் மொழி அடிப்படையிலும் இன்றும் வித்தியாசமிருக்கிறதென்றும் குறிப்பிட்ட திரு வைத்திலிங்கம் இவற்றை நீக்க ஒற்றுமை காண ஆசிரியர் சம்மேளனம் உருவாக்கப்பட்டுள்ளதென்றார் கருத்தொற்றுமை காண்பதில் கஷ்டமுள்ள சர்ச்சைக்குரிய விஷயங்களை சிறிது ஒதுக்கி வைத்துவிட்டு ஒற்றுமை காணக்கூடிய பல விஷயங்களைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துள்ளோம் என்று கூறிய திரு வைத்திலிங்கம் சம்பளவிஷயம் இடமாற்றத்திட்டம் ஆகியவைகளில் உடன்பாடு காணப்பட்டுள்ளதென்றார் போதனாமொழிப் பிரச்னையில் அரசியல் வாதிகளின் தலையீடு அல்லாமல் ஆசிரியர்களிடம் விடப்பட்டால் அவர்கள் அதைச் சுமுகமாக நல்ல முறையில் தீர்த்துவிடுவார்களென்றும் திரு வைத்திலிங்கம் சொன்னார் இந்தப்பிரச்னைகளையெல்லாம் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைக்க முடியும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்

ஆசிரிய சமுதாயத்தை மதம் மொழி ரீதியில் பிரிக்கக்கூடாது என்று கூறிய அவர் ஆசிரிய சம்மேளன நிர்வாக சபைக் கூட்டங்களில் சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளும் உபயோகிக்கப்படுகின்றனவென்றும் சொன்னார்.

தேசியஒற்றுமையை தமது பேச்சில் அடிக்கடி வலியுறுத்திய திரு. வைத்திலிங்கம் வடக்கிலும் தெற்கிலும்தீவிரவாதிகளிருக்கிறார்களென்றும் தேசிய ஐக்கியத்துக்காக உழைக்கவேண்டியது ஆசிரியர்களின் முழுமுதற் கடமையென்று கேட்டுக்கொண்டார்,

மாணவர்கள் மத்தியில் நல்லெண்ணம், தேசிய ஐக்கியம் வளர்க்க[illegible] வேண்டும் பாடசாலைகளில விஞ்ஞான ஆய்வுகூடம் மட்டுமல்ல, நல்லெண்ணம், நட்புறவு, சமூக ஒற்றுமை, தேசிய ஐக்கியம் ஆகியவற்றை வளர்க்கும் ஆய்வுகூ[illegible]ாகப் பாட

சர் திரு. துடாவை மாத்தறையில் ஆசிரியர்கள் தொழிற்சங்கம் அமைத்ததையும் அதுபின்னர் தென்னிலங்கை ஆசிரியர்கள் சங்கமாக வளர்ச்சியடைந்ததையும் அந்தக் கூட்டத்தில் திரு ஏ வைத்திலிங்கம் கலந்துகொண்டு ஆலோசனைகள் கூறியதையும் நினைவு கூர்ந்தார்.

ஆசிரியர்கள் அனைவரும் ஒரே சங்கத்தில் சேர்ந்து ஒற்றுமையாக இருக்கவேண்டியதன் அவசியத்தையும் திரு துடாவை வலியுறுத்தினார்.

பொருளாதாரத்தை விருத்திசெய்வதற்கு வழிவகுக்கக்கூடிய கல்வித்திட்டம் நாட்டுக்குத்தேவை யென்பதே மக்களின்விருப்பம் என்றும் உதவியமைச்சர் சொன்னார்

ஆசிரியர்கள், பெற்றோர், மாணவர், பொதுமக்கள் ஆகியோரின் ஒத்துழைப்பின்றி எந்தக் கல்வித்திட்டமும் வெற்றிபெறமுடியாது என்று கூறிய திரு துடாவை ஆசிரியர்களின் நலவுரிமைக் கோரிக்கைகள் வெற்றிபெறுவதற்கும் மக்களின் ஒத்துழைப்பு, ஆசி ஆதரவு அவசியமென்றார்

முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் ஆசிரியர்களின் சுதந்திரம் பறிக்கப்பட்டதென்றும் அரசியல் காரணமாக வேலைநீக்கம் செய்யப்பட்ட ஆசிரியர்கள் மீண்டும் வேலையில் அமர்த்தப்பட்டனரென்றும் உதவி அமைச்சர் கூறினர்

ஆசிரிய இடமாற்றங்கள் பற்றிக்குறிப்பிடுகையில் இடமாற்ற சபையொன்று அவசியமென்றும் அரசியல் தலையீடு இல்லாத இடமாற்றங்களுக்கு அப்படியொரு சபைதான் சரியான வழியென்றும் கூறிய திரு துடாவை ஆசிரியர்களுக்கு அரசியல் உரிமை தருவதற்கு அரசாங்கம் முடிவுசெய்திருப்பதையும் குறிப்பிட்டார் இதற்கான மசோதாவை மேல்சபையும் நிறைவேற்றுமென்று நம்புவதாக அவர் கூறி செனட் சபைக்கு சூசகமாக ஒரு கிண்டலும் செய்தார்!

"அரசாங்கத்தின் புதிய

## எம். பியாக விருப்பமா; மந்திரியாக விருப்பமா?

ஒரு 'எம். பி' ஆகவேண்டுமென்று எவ்வளவோ பேருக்கு ஆசை. பணத்தைப் பணமாகப் பார்க்காமல் தேர்தல் பேராட்டத்தில் செலவழிக்கின்றனர். ஏருத படிகள் ஏறுகின்றனர். பாராதவர்களையும் பார்த்துப்பார்த்துக் கும்பிடு போடுகிறார்கள். பல்லைக் காட்டி வேண்டுகிறார்கள். பலபல உறுதிமொழிகளும் கொடுக்கின்றனர். செத்த வீடு, கல்யாணவீடு எல்லாவற்றுக்கும்செல்லுகின்றனர். முடிவில் தேர்தலில் அவர் வெற்றிபெறுவதாக வைத்துக்கொள்வோம்.

பின்பு அமைச்சராகவேண்டுமென்றுஆசை. எப்படியோ அதிர்ஷ்டவசத்தால் அமைச்சருமாகிவிடுகின்றார் பின்னராவது அமைதியுண்டா? பாவம் திடீர் திடீரென வேலைநிறுத்தங்கள் நடக்கின்றன. அமைச்சரின் காரியாலயத்தில் வேலைநிறுத்தக்காரர்கள் படையெடுத்துச் சென்று அட்டகாசம் செய்ததாகவும், செய்யக்கூடாததெல்லாம் செய்ததாகவும் கேள்விப்பட்டேன். அமைச்சரைக் கண்டு யாரும் பொருமைகொண்டால் அது எவ்வளவு பெரும் தவறு! அவரைப் பார்த்து இக் காலத்தில் அனுதாபம் கொள்ளவேண்டும். எம். பி. ஆவதற்கு முன்பாக இருந்த அமைதி இப்போது இல்லை. மந்திரி வேலையை விட்டால் போதுமென்று நினைக்கும் அளவுக்கு உபத்திரவம். வேலையை விட்டாலும் நிம்மதியுண்டா? பின்னர் புதிதாக ஆட்சிக்கு வருபவர்

**ஐயாறன் எழுதுவது**

கள், விசாரணைசெய்து, குற்றவாளியாகக் கண்டு மரண தண்டனையும் விதிக்கலாம். லிபியாவில் முன்னாள் அமைச்சர்கள் இருவருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக ஒரு செய்தி தெரிவிக்கின்றது பிரதமர்களானல் உயிருக்கே ஆபத்து. இலங்கையில் பண்டாரநாயக்கா பாகிஸ்தானில் லியாத் அலிகான், பர்மாவில் ஒரு மந்திரிசபை அனைத்தும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளது. இன்னும் எவ்வளவோ! எவ்வளவோ!! மந்திரிகளாக இல்லாமல் இருந்திருப்பின்.

டமோ பேசியதும், சில நிமிடங்களில் அமைச்சரின் அறைக்குள் சென்றேன். முன்பின் அவரைக் கண்டதில்லை. அறிமுகமானதும் அவர் பக்கத்தில் ஓர் ஆசனத்தில் இருக்கச் சொன்னார். வெளியிலிருந்து ஒவ்வொருவராக உள்ளே வருகின்றனர். வேலை வேண்டும் என்கிறார் ஒருவர். இடம் மாற்றத்தை மாற்ற வேண்டும் என்று கேட்கின்றார் மற்றொருவர். தன்னை அநியாயமாக வேலையிலிருந்து நீக்கிவிட்டதாக முறையிடுகிறார் ஒருவர். தமது ஊர் சங்கத்துக்கு வந்து பேசவேண்டும் என்கிறார் மற்றொருவர். மந்திரியிடம் துறையிட்டு மூன்று மாதமாகியும் தமக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லையே என்பது ஒருவரின் முறைப்பாடு. வேறொரு மந்திரிக்கு ஏதோ சிபார்சு செய்ய வேண்டுமென்கிறார் ஒருவர். உடன் டெலிபோன் எடுத்துப்பேசிச் சிபார்சு செய்கிறார். வேலைவேண்டுமென்பது பற்றித்தான் பலரது கோரிக்கையும் இதையெல்லாம் கேட்கக்கேட்க எனக்கே மூளை குழம்பியது. பாவம்! அமைச்சருக்கு எப்படி இருக்குமோ?

எப்படியோ, ஒவ்வொருவர் கூறுவதையும் மிகப் பொறுமையுடன் கேட்டு அவரவர்களுக்கு ஆறுதல் கூறித் திருப்திப்படுத்தி அனுப்புகின்றார். நேரமோ ஆகிறது. 12-30 மணிக்கு வீட்டுக்குச் சாப்பிடப்போக வேண்டும். மற்றவர்களை எல்லாம் வரச்சொல்லி ஏதோ ஆறுதல்சொல்லி அனுப்பிவிட்டு, சாப்பாட்டுக்குச் செல்லுகின்றார் ஒவ்வொரு நாளும் இதே கதை தானும். தமது தொகுதிக்கென்று கிழமையில் ஒரு நாள் ஒதுக்குகின்றார். அன்று மற்றவர்களைப் பார்ப்பதில்லை. மற்ற நாட்களில் தொகுதியாளர்களைப் பார்ப்பதில்லையாம். ஆனல் திடீரென்று வந்துவிட்டவர்களைப் பார்க்கமுடியாது என்று சொல்லித் திருப்பி அனுப்பமுடியுமா?

"கடவுளே! எனக்கு வேறு என்ன வேலை, என்ன ஜன்மம் கொடுத்தாலும் சரி, ஒரு எம். பியாகவோ அல்லது மந்திரியாகவோ மட்டும் வேலை அளித்து எனக்குச் சாந்தியே இல்லாமல் செய்யவேண்டாம்" என்று பிரார்த்திக்கவேண்டும்போல் தோன்றியது! நீங்கள் மந்திரியாக விரும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்தை அமுல் செய்வதன் மூலம் முற்ருக நீங்கிவிடும் என்ற நம்பிக்கையும் கூட தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் நீங்கி வருகிறது.

வம்சாவழிப் பிரஜை, பதிவுப் பிரஜை, விசேஷபிரஜை இந்தியர் பாகிஸ்தானியர் பதிவுப்பிரஜை, சிறிமா-சாஸ்திரி பதிவுப்பிரஜை என பல வாருக இந்நாட்டு மக்கள் குறிப்பாகத் தோட்டத்தொழிலாள மக்கள் பிரித்து வைக்கப்பட்டிருக்கின்றனர்.

இலங்கைப் பிரஜாவுரிமை பெற்ருலும் இந்தியர் அல்லது அந்நியர் என்ற பெயர் நீங்குவதாகக் காணேம் இந்தியத் தமிழர் என்று அவர்கள் குறிப்பிடப்படுகின்றனர். இதனுல் அவர்கள் வேலை வாய்ப்புப் பெறவோ நிலம் வாங்கவோ முடியாதபடி சட்டம் தடை செய்கிறது.

பிரஜாவுரிமைச் சட்டங்களை மாற்றியோ இதரசட்டங்களைத் திருத்தியோ இலங்கைப் பிரஜைகளான இந்தியவம்சாவழியினரையும் இந்தநாட்டு மக்களாக ஏற்று அவர்களும் இதர மக்களுடன் சேர்ந்து நாட்டின் முன்னேற்றத்துக்காக உழைப்பதற்கு வழி காண்பது சிறந்தது.

தோட்டத் தொழிலாளரும் மனிதர்தான், அவர்களின் பிரச்னைகளை மனிதாபிமானத்துடன் அணுகி அதற்குத் தீர்வுகாணவேண்டும், கட்சி அரசியலுக்கும் தொழிற் சங்கச்செல்வாக்குக்கும் அப்பாற்பட்டநிலையில் இந்தமக்களின் பிரச்னைக்குத் தீர்வு காண்பதற்கு தேசியரீதியில் முயற்சி காணலாம், இதற்குப் பிரதமர் ஸ்ரீமாதான்முன்வர முடியும்.

## 'தீண்டாமைப் பிரச்னைக்கு

# சட்டரீதியான தீர்வுகாண அறநிலைய மசோதா வேண்டும்!'

மாவிட்டபுரம், வியா.

வடபகுதியில் இந்து மக்களிடையே நீண்டகாலமாக நிலவிவரும் தீண்டாமைப் பிரச்னைக்குச் சட்டரீதியான தீர்வுகாண 'அறநிலைய மசோதாவை' இயற்றவேண்டும் என்று அரசைக்கோரும் தீர்மானம் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி மற்றும் முற்போக்கு வாலிபர் சங்கங்களின் சம்மேளன அரசியல் மகாநாட்டில் நிறைவேற்றப்பட்டது

தெல்லிப்பளை யூனியன் கல்லூரியில் கட்சிக்கொடியைக்கம்யூனிஸ்ட்அமைப்பாளர் திரு. அ. வைத்திலிங்கம் ஏற்றியதையடுத்து வாலிபர் சங்கத் தலைவர் க. தவஞானம் தலைமையில் ஆரம்பமானது

இக்கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள் வருமாறு:-

ஐக்கிய அரபுக் குடியரசு ஜனதிபதி நாஸர் மறைவுக்கு அனுதாபம் தெரிவிப்பதுடன் அவரது போராட்டங்களை மற்ற ஏகாதிபத்திய நாடுகளும் வழிநடாத்த வேண்டும்

மக்கள் அரசாங்கம் வெளிநாட்டுக் கொள்கைகளை வாழ்த்தி வரவேற்கும் அதே நேரத்தில் உள்ளூர் சம்பந்தப்பட்ட கொள்கைகளிலும் நிதானமான போக்கைக் கடைப்பிடிக்க வேண்டும்.

யாழ் நகரில் ஒரு சிரேஷ்ட பல்கலைக்கழகம் அமைக்கவேண்டும்.

சிறுபான்மைத் தமிழ்ப் பிள்ளைகள் எதுவித தடையுமின்றிப் பாடசாலைகளில் படிக்க வசதி செய்வதுடன் சிறுபான்மைத் தமிழாசிரியர்களையும் நியமிக்கவேண்டும்.

தமிழ்மொழி போதனமொழியாக இருக்கும் பாடசாலையில் சிங்களத்தையும் ஒரு பாடமாகப் படிப்பிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

சமூகக் குறைபாட்டுச் சட்டத்தைத் திருத்தியமைத்து சிறுபான்மை மக்களுக்கு உதவவேண்டும்.

வேலையற்ற வாலிபர் பிரச்னைக்கு முக்கியத்தும் கொடுத்து அப்பிரச்னையைத் தீர்ப்பதற்கு அபிவிருத்தி வேலைகளை மேற்கொண்டு இப்பிரச்னையைத் தீர்க்க உதவ வேண்டும்.

வெளிநாட்டுக்கு சொந்தமான வர்த்தகத்தைச் சொந்தமாக்கி 'கூட்டுஸ்தாபனம்' அமைத்து அரசு பொறுப்பேற்கவேண்டும்.

காங்கேசன்துறை துறைமுக அபிவிருத்தி, காங்கேசன்துறை உணவுப்பண்டசாலை மயிலிட்டி மீன்பிடித் துறைமுக வேலைகளை மிக விரைவில் நடைபெற உதவ வேண்டும்.

யாழ். கனிஷ்ட தொழில் நுட்பக் கல்லூரியை சிரேஷ்ட தரத்திற்கு உயர்த்த வேண்டும்.

விதை உருளைக்கிழங்கின் விலையைக் குறைத்து சின்ன வெங்காயத்தின் விலையைக் கூட்டவேண்டும்.

— —

தான் திறந்து வைக்கப்பட்ட 'மேபல்தம்பையா' மண்டபத்தில் நடைபெற்ற போது தான் இந்த ரசமான சம்பவமும் இடம் பெற்றது.

ஆசிரிய சங்கங்களின் [illegible]லவராகவும் கொக்குவில் இந்துக் கல்லூரியின் அதிபராகவும் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ள திரு. ஹன்டி பேரின்பநாயகம் பழைய வாலிபர் காங்கிரஸ் தூண்களில் ஒருவராகவும் விளங்கியவர். அவர் பேச்சுக்கு என்றைக்குமே ஒரு தனி மதிப்பு. உதவி அமைச்சர் விழாக்கூட்டத்துக்கு வந்து சேருவதற்கு அதிக தாமதம் ஏற்பட்டதையும் ஆசிரியர்கள் நீண்ட நேரம் மண்டபத்தில் காத்திருந்ததையும் சிவராத்திரி நித்திரை முழிப்புக்கு ஒப்பிட்டு [illegible]யென்பதைத் தங்களிடம் கேட்டுத் தங்கள் விருப்பப்படியே பாடத் திட்டம் வகுக்கப்பட வேண்டுமென்றும் அந்தப் பிள்ளைகள் கேட்கிருர்கள் என்ருர்.

ஆசிரியர்களை இடமாற்றம் செய்வதால் ஆசிரியர்களுக்கோ, பிள்ளைகளுக்கோ பாடசாலைகளுக்கோ கல்விக்கோ நன்மையில்லையென்று கூறிய திரு. ஹன்டி சைவ சித்தாந்தத்தைக் காட்டி பாடசாலைகளுடன் ஆசிரியர்கள் இரண்டறக் கலக்க வேண்டுமென்றும் அடிக்கடி இடமாற்றம் செய்தால் அவர்களால் எப்படி இரண்டறக் கலக்க முடியும் என்று கேட்டார். ஆசிரியர் நியமனம், இடமாற்றம் அவர்களின் கடமைகள், சம்பளத் திட்டம் ஆகியவற்றை கவனிக்க ஒரு குழுவை நியமிக்க வேண்டுமென்றும் அவர் யோசனை தெரிவித்தார்.

விழாவுக்குத் தலைமை வகித்த திரு. க. மகாலிங்கசிவம் வடமாகாண ஆசிரியர் சங்கம் தான் முதலில் ஆரம்பிக்கப்பட்ட சங்கமென்றும் தாய்ச் சங்கமான அகில இலங்கை ஆசிரியர் சங்கம் இன்று பொன்விழாவைக் கொண்டாடினுலும் வடமாகாண ஆசிரியர் சங்கம் ஐம்பந்தேழு ஆண்டுகளைக் கடந்து விட்டதென்றும் கூறிப் பெருமைப்பட்டுக் கொண்டதையும் அவருக்குப் பின் பேசிய அகில இலங்கை ஆசிரியர் சங்கத்தின் உபதலைவர் திரு. எஸ். மகேசன் தேசிய ரீதியில் அமைக்கப் பட்ட முதல் ஆசிரியர் சங்கம் அகில இலங்கை ஆசிரியர் சங்கம் தான் என்று அடித்துச் சொல்லி ஆசிரிய சங்கங்களின் வரலாறுகள் பற்றிக் கூறியதையும் அடுத்துப் பேச எழுந்த ஆசிரிய சம்மேளனத் தலைவர் திரு. ஏ. வைத்திலிங்கம் ஆசிரிய சங்கங்களின் வரலாறுகள் பற்றித் தலைவரும் அவருக்குப் பின் பேசியவரும் விளக்கிக் கூறிவிட்டதால் தாம் அதுபற்றிப் பேசவிரும்பவில்லையென்றும் சொல்லி ஆசிரியர்கள் மத்தியில் ஒற்றுமை நிலவ வேண்டியதன் அவசியத்தையும் வெவ்வேறுதொழிற் சங்கங்களாக ஆசிரியர்கள் பிரிந்திருந்தால் அதனுல் மேலிடத்து உத்தியோகத்தர்களுக்கும் தான் இலாபம் என்ருர். ஒரு தொழிலில்பல தொழிற்சங்கங்களிருந்தால் ஒரு சங்கத்தைப்பாவித்தும் மற்றெருசங்கத்தை உடைப்பதற்கு மேலிடத்து உத்தியோகத்தர்களும் அதிகாரிகளும் முயற்சிசெய்வார்களென்றும் அவர்சென்ஞர்.

[illegible]யம் வளர்க்க[illegible]வேண்டும் பாடசாலைகளில விஞ்ஞான ஆய்வுகூடம் மட்டுமல்ல, நல்லெண்ணம், நட்புறவு, சமூக ஒற்றுமை, தேசிய ஐக்கியம் ஆகியவற்றை வளர்க்கும் ஆய்வுகூ[illegible]ாகப் பாடசாலைகள் வ[illegible]ங்கவேண்டுமென்றும் திரு. வைத்திலிங்கம் கூறிஞர்.

1935-ம் ஆண்டிலேயே வடமாகாண ஆசிரியர் சங்கம் தாய்மொழியே பிள்ளைகளின் போதனுமொழியாக இருக்கவேண்டுமெனக் கோரி தீர்மானம் நிறைவேற்றிய தென்பதையும் திரு. வைத்திலிங்கம் ஒரு சந்தர்ப்பத்தில் நினைவூட்டினர்.

வடமாநில வித்தியாதிபதி திரு. வி. சங்கரலிங்கம் பேசுகையில் உயர்ந்த சமுதாயத்தை உருவாக்குவது புனிதமான ஆசிரியப்பணியிலீடுபட்டுள்ள ஆசிரியர்களினதும் ஆசிரியசங்கங்களினதும் கடமையென்பதை எடுத்துக் கூறிஞர்.

உதவி அமைச்சர் திரு துடாவை விழாவுக்கு வருவதற்கு முன்னரே தமது தலைமையுரையை நிறுத்தி முடித்த தலைவர் திரு. க. மகாலிங்கசிவம் உதவி அமைச்சரைப் பேசுமாறு அழைப்பதற்கு திரு. ஹன்டி பேரின்பநாயகமும், திரு. சங்கரலிங்கமும் காட்டிய வழியைப் பின்பற்றி தமது தலைமையுரையின் சுருக்கத்தை ஆங்கிலத்தில் எடுத்துக் கூறிஞர். கல்லூரி அதிபர்கள் நியமனம், ஆசிரியர் பதவி உயர்வில் ஒரு ஒழுங்குமுறை பின்பற்றப்படவேண்டும் என்றும் சேவை அடிப்படையில் பதவி உயர்வு வழங்கப்படவேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

''நான் ஒரு சாதாரணச் சிங்களச் சட்டம்பிதான்'' என்று தமது பேச்சை ஆரம்பித்தார் உதவிக் கல்வி அமைச்சர் திரு பி வை. துடாவை அவரது பேச்சை திரு. வி. பொன்னம்பலம் தமிழில் மொழிபெயர்த்தார். நான் இங்கு குறிப்பிடும் திரு துடாவையின்பேச்சும் திரு பொன்னம்பலத்தின் தமிழ்தான்

''ஆசிரியர்களின் பிரச்னைகள், கஷ்டங்கள், தேவைகள் மட்டுமல்ல பிள்ளைகளின் தேவைகள், நிலைமைகளையும் நான் நன்கறிவேன் பொதுமக்களின் கஷ்டங்களையும் நான் அறிவேன் சாதாரண கிராமப்புறச் சட்டம்பியான என்மீது ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் நம்பிக்கைவைத்து பொறுப்பையும் பதவியையும் அளித்துள்ளனர் இந்தப்பொறுப்பும் பதவியும் வந்தாலும் ஆசிரிய உலகத்தின் நிலையையும் போராட்டங்களையும் நான் மறந்துவிடத்தயாராகஇல்லை என்று கூறிய உதவிஅமைச்சர் குறிப்பிட்டார் இதற்கான மசோதாவை மேல்சபையும் நிறைவேற்றுமென்று நம்புவதாக அவர் கூறி செனட் சபைக்கு சூசகமாக ஒரு கிண்டலும் செய்தார்!

''அரசாங்கத்தின் புதிய கல்வித் திட்டம் விரைவில் ஆட்சிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் இது அனைவருக்கும் திருப்தியளிக்கும் திட்டமாக இருக்குமென்று சொல்லமுடியாது ஆனுலும் இதை முதல் படியாக வைத்துக்கொண்டு பின்னர் எல்லோருக்கும் திருப்தியளிக்கக் கூடியதாக உருவாக்கலாம்என்று நம்புகிறேன்யார்விரும்பி[illegible]லும்விரும்பாவிட்டாலும் சோஷலிஸ சமுதாய அமைப்பை உருவாக்குவதே அரசின் திட்டம். சோஷலிஸ அமைப்பை உருவாக்கும் பணியில் தான் புதிய கல்வித்திட்டமும் அமையும். இதில் ஆசிரியர்கள் நடுநிலைமைவகிக்காது பூரண ஆதரவளிக்கவேண்டும்'' என்று உதவி அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

உள்ளவர்களுக்கும் இல்லாதவர்களுக்குமிடையிலான போராட்டத்தில் ஆசிரியர்கள் நடுநிலைமைவகிக்க முடியாதென்பதை, இந்தியக் கல்வி அமைச்சர் ஒருவர் கூறியதை எடுத்துக் காட்டாகச் சுட்டிக்காட்டிய திரு. துடாவை புதிய கல்வித்திட்டத்துக்கு ஆசிரியர்கள் பூரண ஒத்துழைப்பு அளிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

திரு. ஹன்டி பேரின்பநாயகம் தமிழில்பேசி 'தண்டனை' அளித்ததுபற்றி உதவி அமைச்சர் திரு. துடாவை குறிப்பிட்டு, திரு. பேரின்பநாயகம் தமிழில் பேசியது தமக்கு ஒரு தண்டனையாக இருக்கவில்லையென்றும் அவர் தமிழில் பேசியதை திரு பொன்னம்பலம் தமக்கு மொழிபெயர்த்துச்சொல்லிக் கொண்டிருந்தாரென்றும் கூறிவிட்டு திருபேரின்பநாயகம் ஆங்கிலத்தில் பேசியது தான் தனக்கு தண்டனை விதிக்கப்பட்டதாக இருந்ததென்ருர்.

''என்றைக்கும் சிங்களம் தமிழ் ஆகிய இருமொழிகளுக்கும் இடம் தந்து நடைமுறையில் வைத்திருப்பவர்கள் நாங்கள்தான்சாதாரண மக்களும் இரு தேசிய மொழிகளையும் பயன்படுத்தவும் அன்ருட வாழ்வில் இரு மொழிகளுக்கும் இடமளிப்பதுதான் அரசாங்கத்தின் நோக்கமாகும் எந்த இனத்தின் மொழியையோ பாரம்பரியகலாசாரத்தையோ அழிப்பது எங்கள் நோக்கமல்ல. ஒவ்வொரு இனத்தின் மொழி, பண்பாடு, பாரம்பரிய கலாசாரம் ஆகியவைகளைப் பாதுகாத்து நிற்பதுதான் நமது நோக்கம்

''என்று உதவிக்கல்வி அமைச்சர் கூறியபோது சபையில் கரகோஷம் எழுந்தது.

கொழும்புப்பல்கலைக்கழகத்தில் மூடப்பட்ட தமிழ்க்கலைப்பிரிவை மீண்டும் ஆரம்பிக்கமுன்வந்திருப்பதை அவர் இதற்கு எடுத்துக்காட்டாகக்கூறிஞர்.

ஆசிரியர்களின் பதவி உயர்வுபற்றித் தலைவர் திரு மகாலிங்கசிவம் கூறியதைச் சுட்டிக்காட்டிப் பேசிய உதவி அமைச்சர் பதவி உயர்வுசேவைமூப்பை வைத்துவழங்கமுடியாதென்றும் பெரும் பொறுப்பைச் சமாளிக்கக்கூடிய அறிவும் ஆற்றலுமுள்ளவர்களுக்குத் தான் அதிபர், உதவி அதிபர் பதவி வழங்கமுடியும் என்று கூறிவிட்டு ''இது மந்திரிசபையின் முடிவல்ல எனது சொந்த அபிப்பிராயம்'' என்று தமதுபேச்சை முடித்துக் கொண்டார்

வடமாகாண ஆசிரியர் சங்கச் செயலாளர் திரு. சபாநடேசனின் நன்றியுரையுடன் விழாமுடிவடைந்தது.

— —

## வயிற்றுளைவு பரவுகிறது

பருத்தித்துறை, வியா

வடமராட்சிப் பகுதியில் பல இடங்களில் அடுத்துசில நாட்கள் பெய்த மழையைத் தொடர்ந்து வயிற்றுளைவு நோய் பரவிவருகிறது. வைத்தியசாலைகளுக்குச் செல்லும் பல நோயாளிகள் இந்நோயினுல் பெரிதும் பீடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. கிணறுகளுள் குளோறின் கலக்கும்படியும் சுட்டாறிய நீரை உபயோகிக்கும்படியும் வைத்திய அதிகாரிகள் மக்களைக் கேட்டுள்ளனர். பல குழந்தைகளுக்கும் இந்நோய் கண்டுள்ளதாகத்தெரிகிறது.

வில் லியாத் அலிகான், பர்மாவில் ஒரு மந்திரிசபை அனைத்தும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளது. இன்னும் எவ்வளவோ! எவ்வளவோ!! மந்திரிகளாக இல்லாமல் இருந்திருப்பின் யாரும் அவர்களைப் பற்றி நினைக்கவும் மாட்டார்கள் இவ்வளவு ஆபத்துக்கள் இருந்தும், உயிரையும் மதிக்காமல் மந்திரிகளாக வருகிறதெனில் அவர்களுக்கு நாம் எவ்வளவு நன்றி தெரிவிக்கவேண்டும்! எவ்வளவு கடமைப்பட்டவர்கள்: ஆகவே எம். பி.யைப் பற்றியோ, அமைச்சரைப் பற்றியோ யாரும் பொருமை கொள்ளலாமா? நீங்கள் யாரும் இன்றுள்ள ''ஜனநாயக'' அரசியலில் அமைச்சராக விரும்புகிறீர்களா?

0 0 0

ஒரு நாள் ஓர் அமைச்சரின் காரியாலயத்துக்கு ஏதோ அலுவலாகச் சென்றேன் வேலைமுடிந்து திரும்புகையில், அமைச்சரைப் பார்த்துப் பேசுகிறீர்களா? என்று அங்கு வேலைபார்க்கும் ஓர் அன்பர் கேட்டார். முன் ஏற்பாடு இல்லாமல், அலுவல் எதுவும் இல்லாமல் அமைச்சரைப் பார்த்து என்ன பேசுவது என்று ஒன்றும் புரியவில்லை. என்ருலும் பார்க்கலாம் என்று அன்பருடன் சென்றேன்.

அமைச்சரின் அறைக்கு வெளியே நீண்ட 'கியூ' வரிசை நின்றது வரவரக் 'கியூ' நீண்டுகொண்டே போயிற்று அன்பர் யாடு

அல்லது மந்திரியாகவோ மட்டும் வேலை அளித்து எனக்குச் சாந்தியே இல்லாமல் செய்யவேண்டாம்'' என்று பிரார்த்திக்கவேண்டும்போல் தோன்றியது! நீங்கள் மந்திரியாக விரும்புகிறீர்களா? அப்படியாயின் நீங்கள் பெரிய தியாகி, பெரிய வீரர் தான்.

மீளா அடிமை உமக்கே
ஆளாய்ப் பிறரை
வேண்டாதே
மூளாத் தீப்போலுள்ளே
கனன்று முகத்தால்
மிகவாடி
ஆளாங்கிருக்கும் அடியார்
தங்கள் அல்லல்
சொன்னக்கால்
வாளாங்கிருப்பீர் திருவா
ரூரில் வாழ்ந்து
போதீரே.
—சுந்தரர்.

— —

கிராம..:

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

கள் பிரச்னைகளை தீர்க்கக் கூடியதாக விஞ்ஞான வசதிகள் செய்யப்படவில்லை ஆகவே கிராமங்களில் சகல வசதிகளுமுள்ள ஆய்வுகூடங்கள் நிறுவதிட்டமிட்டுள்ளோம்

சாதி, மத வேறுபாடற்ற முறையில் தமிழ்மக்களும், சிங்கள மக்களும் இணைந்து நமது நாடு என்ற மனப்பான்மையுடன் செயலாற்ற வேண்டும். இலங்கையை பல பிரிவுகளாக கூறுபோடுவதால் பிரச்னைகளை தீர்க்கலாம் என சிலர் நினைக்கின்றனர். அதன்மூலம் ஒரு போதும் தீர்க்கமுடியாது'' என்ருர்.

இக்கூட்டத்தில் திரு. எம். சி. சுப்பிரமணியம், திரு ம. சிதம்பரநாதன் உட்பட பலர் உரையாற்றினர்.

......

## உபகமிட்டி நடவடிக்கை

கொழும்பு, வியா

பிரதமரால் அமைக்கப்பட்ட மந்திரிசபை உபகமிட்டி கூட்டுஸ்தாபனங்களினதும் மற்றும் ஸ்தாபனங்களினதும் நடவடிக்கைகள்பற்றி அறியுமுகமாக கேள்விவிபரத் திட்டமொன்றைத் தயாரித்து குறித்த ஸ்தாபனங்களுக்கு அனுப்பி வைத்துள்ளது 4 உதவி மந்திரிகளையும் உதவி ஒடிட்டர் ஜெனரலையும் கைத்தொழில் விஞ்ஞானசபையின் ஆலோசகரையும் உறுப்பினர்களாகக் கொண்ட இவ்வுபகமிட்டியின் தலைவர் மீன்பிடி அமைச்சர் திரு. ஜோர்ஜ் ராஜபக்ஸ ஆவர்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் [illegible] யாழ்ப்பாணம் [illegible] மேலே வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 23-ம் [illegible] வெளியிடப்பட்டது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org